விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 7 முஹர 18 இதழ் 225

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23-9-1986

வல்வை,பரு.,தொண்டமானாறுமுகாமிலிருந்துவெளிவந்த

## படையினரைஎதிர்த்துபுலிகள் நான்கு மணிநேர கடும் சமர்

வல்வெட்டித்துறை நிருபர்

பல வாரங்களாக அமைதியாக இருந்தவல்வெட்டிதுறையில் நேற்று சுமார் 4 மணித்தியாலங்களுக்குமேலாக வல்வை இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கடும்சமர் நடைபெற்றது.

நேற்றுக்காலை வல்வை இராணுவ முகாமிலிருந்து மேற்குப் பக்கமாக வந்த நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினரை முகாமிலிருந்து சுமார் 200 யார் தூரத்தில் வைத்துப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். புலிகளின் சிலிண்டர் தாக்குதலில் சிக்கி படுகாயமடைந்த இராணுவத்தினரையும் இழுத்துக் கொண்டு சக இராணுவத்தினர் அருகிலுள்ள ஆட்களில்லாத வீடொன்றினுள் புகுந்து கொண்டபொழுது புலிகள் தொடர்ந்தும் அவர்கள்மீது கடும் தாக்குதலை மேற்கொண்டதால் அவர்கள் அவ்வீட்டை விட்டு வெளியேறவோ முகாமுக்குத் திரும்பிச் செல்லவோ முடியாதவாறு

[8-ம் பக்கம் பார்க்க]

# வாகனேரியில்படையினர்சூட்டு பதினறு பொதுமக்கள் பலி!

## முகாம்கள் மீது போராளிகள் தாக்குதல்

(நமது நிருபர்)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகனேரிப் பகுதியில் தேடுதல் நடத்திய ஆயுதப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 16 பொதுமக்கள் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்றுமுன்தினமிரவு இப் பயங்கர சம்பவம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் 40 மைல் தொலைவில் வாகனேரிப்பகுதி உள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ளதால் ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களின் தகவல் விபரங்கள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்று பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, மட்டக்களப்புப் பகுதியில் ஆயுதப் படையினரதும் கவச வாகனங்களினதும் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் அம்பாறை வீதிவழியாகப் பெருந்தொகையான கவச வாகனங்கள் மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்துள்ளன.

படுவான்கரை, வவுணதீவு அதிரடிப்படை முகாம் மீது போராளிகள் திடீர்த் தாக்குதல் நடத்தியபொழுது படையினரும் பதில் தாக்குதல் மேற்கொண்டனர்.

திட்டவட்டமாகச் சேதம் எதுவும் தெரிவிக்கப்படாத போதிலும் சில அதிரடிப்படையினர் பலியாகியிருக்கலாமெனத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு கிரானில் உள்ள புலி பாய்ந்த கல் என்னுமிடத்தில் போராளிகளுக்கும் ஆயுதப்படையினருக்கும் நேரடி மோதல் இடம்பெற்றுள்ளது. சேதவிபரம் தெரிவிக்கப்படவில்லை.

அதேசமயம் வாழைச் சேனைப்பகுதியில் உள்ள வீதிக

(8-ம் பக்கம் பார்க்க

## பாலமோட்டையில் 25 பேர் கைது

ஒட்டுசுட்டான், திங்கள் வவனியா இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த இராணுவத்தினராலும், கறுப்புச்சட்டைக்காரராலும்கடந்த ஞாயிற்றுக்கிழமை பாலமோட்

[8-ம் பக்கம் பார்க்க]

## அணிவகுத்துசென்ற புலிகள் 'ஹெலி' நோக்கி தாக்குதல்!

முல்லைத்தீவு, திங்கள் முல்லைத்தீவு - முள்ளியவளை பகுதியில் நூற்றுக்கும் அதிகமான விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவினரின் நடமாட்டத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

முள்ளியவளையில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான இராணுவ இளைஞர்கள் பல்வேறுரக புதிய இயந்திரத் துப்பாக்கிகள், நவீன ரக துப்பாக்கிகள் சகிதம் அணிவகுத்து நடைபவனியாகவும், வாகனங்களிலும் சென்றனர்.

இதனை அவதானித்த ஹெலிகாப்டர் இருதடவை தாக்குதல் நடாத்தியது. அணிவகுத்துச் சென்ற புலிகள் ஹெலிகொப்டரை நோக்கி எதிர்த் தாக்குதல் நடத்தியதும் ஹெலி மேலெழுந்து பறந்து சென்று நீராவிப்பிட்டி, வற்றுப்பளை, கனுக்கேணி, சிலாவத்தை அளம்பில் பகுதிகளில் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது. [இ]

● முள்ளியவளையில் 'ஹெலி' தாக்குதல்

## இரு முஸ்லிம்கள், ஒரு தமிழர் பலி; பல வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், செவ். முள்ளியவளை தனியூற்றுப் பகுதியில் ஹெலிகொப்டரின் சூட்டுக்கும், ஷெல் தாக்குதலுக்கும் இரண்டு முஸ்லிம்களும், ஒரு தமிழரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள். ஒரு முஸ்லிம் இளைஞர் காயமடைந்தார். பல வீடுகள் சேதமடைந்தன.

நேற்று முன்தினம் மாலை தனியூற்று, நீராவிப்பிட்டி ஆகிய பகுதிகளில் ஹெலிகொப்டர் தாக்குதலை நடத்தியது. ஹெலிகொப்டர் சூட்டுக்கு நீராவிப்பிட்டியைச் சேர்ந்த சம்சுதீன் [வயது 65], அயாஸ் [32 வயது], கணுக்கோயில் வாசியான தொழிலாளி சிவராசா [வயது 27] ஆகிய மூவரும் ஸ்தலத்தில் பலியானார்கள்.

அப்துல் கரீம் முபாரக் [18 வயது] என்பவர் தலையில் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹெலிகொப்டர் சூட்டைத் தொடர்ந்து ஷெல் தாக்குதல்களும் நடந்தன. இராணுவத்தின் இத்தாக்குதல்களால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. [ச - இ]

வெலிக்கடை தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக

## யாழ். பல்கலைக்கழகத்தில் ஐந்து நாள் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செவ். வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழகத்தில் நாளை மறுதினம் 25-ம் திகதி முதல் 29-ம் திகதிவரை இரு கட்டங்களாக உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

வெலிக்கடைச் சிறையிலிருந்து கிடைக்கப்பட்ட கடிதம் தொடர்பாக யாழ். பல்கலைக் கழக நிர்வாகக் குழு சாரிபில் நேற்று கூட்டம் ஒன்று நடத்

(8ம் பக்கம் பார்க்க)

## பொலிசாரின் அறிவுறுத்தல்

வவனியா, திங்கள் வாடகைக் கார்ச் சாரதிகள் கார் நிறுத்திவைக்கப்படுவதற்கென ஒதுக்கப்பட்ட இடத்திலேயே காரை நிறுத்தி, காருக்குள்ளேயே அவர்கள் இருக்க வேண்டுமென்று பொலிசார் கார்ச் சாரதிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளனர். [இ]

நீதிமன்றங்களைப் பகிஷ்கரிக்க

## யாழ். சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம். செவ் சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நீதிமன்றங்களை பகிஷ்கரிக்க யாழ். சட்டத்தரணிகள் சங்கம் நேற்று ஏகமனதாகத் தீர்

[8ம் பக்கம் பார்க்க]

## 30-ம் திகதி கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், புதன் வெலிக்கடையில் உண்ணாவிரதமிருந்துவரும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக 'தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கான போராட்டத்திற்கான இணைப்புக்குழு கண்

[8-ம் பக்கம் பார்க்க]

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## மூன்றுவது நாளாக பூரண ஹர்த்தால்; படையினர் நடமாட்டம் அதிகரிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று 3-வது நாளாக ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட போது வாரமுடிவுக்குப் பின்னர் நேற்று திறக்கப்பட வேண்டிய அரசசெயலகம், அரசதிணைக்களங்கள், வங்கிகள், பாடசாலைகள் அனைத்தும் மூடப் பட்டுக்கிடந்தன.

இம்மாவட்டத்திலுள்ள ஒரேஒரு அரச கூட்டுத்தாபன தொழிற்சாலையாகிய வாழைச்சேனை காகிதஆலையில்உற்பத்திவேலைகள் அனைத்தும் நிறுத் தப்பட்டன.

மறுஅறிவித்தல் வரை இந்தநிலை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகரம் இன்று 3-வது நாளாக

[8-ம் பக்கம் பார்க்க]

# விளம்பரம்

## விற்பனைக்கு

ஒருமாதம் பாவித்த Lumala சைக்கிள் விற்பனைக்குண்டு. 268/5, நாவலர்றேட், ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். (C 4776)

அப்பளம் அரைப்பதற்கு புதிய முறையில் தயாரிக்கப் பட்ட மெஷின்கள் விற்பனைக் குண்டு தொடர்பு, 198/3, பொன்னப்பா லேன், ஒட்டு மடம், யாழ்ப்பாணம். (C 4764)

மைசூர் அரிசி நம்பர்-1 கல் லில்லாதது, சுத்தமானது, தர மானது, சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர் களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங் கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப் பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

கட்டில் மெத்தைகள், தள பாடங்கள், Sanyo மினி கசற் றேடியோ, வயலின், Bath Tub, அலுமாரி, Baby Cot, glass book self, Pyrex வகை கள் கிளாஸ், கோப்பை, Formica சாப்பாட்டுமேசை, கதிரைகள், தேச்கு கண்ணாடி மேசைகள் Show Case, ஹோல் செற்றிகள், பித்தளைப் பொருட் கள் உடன் விற்பனைக்குண்டு. M. Thiagarajan, 326, Main Street, யாழ்ப்பாணம். [சென்ற் சாள்ஸ் பாடசாலை அருகில்] [C4705]

பெரிய அளவிலான செப்பு, பித்தளை, அலுமினிய கிடா ரம், டபாரா சட்டி, வெங்கல அசையா மணி, திருவாசி, குத்துவிளக்கு, மெழுகுவர்த்தி ஸ்டான்ட், ஸ்தூபி, வேல், சூலம், கும்பசெம்பு, மற்றும் எவர்சில்வர் அன்பளிப்புப் பாவனைப் பொருட்களும் மொத்தமாகவும் சில்லறை யாகவும் பெற்றுக்கொள்ள லாம். தொடர்பு: ஸம்ஸ், 26/B, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். கிளை: 76/2, நவலர் வீதி, யாழ்ப்பாணம். [C-4755]

## தேவை

யாழ். மத்தியிலுள்ள கிறீம் கவுஸில் வேலை செய்வதற்கு பெண்கள் தேவை யாழ். நக ருக்கு அண்மையிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது. இல. 404, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பா ணம். (C 4767)

டீ மேக்கர் வேலை தெரிந்த வரும், (Waiters) பரிமாறுப வர்களும் உடன் தேவை. (மலை நாட்டைச் சேர்ந்தவர் கள் விரும்பத்தக்கது) உடன் தொடர்பு கொள்ளவும்: கல்யாணி கிறீம் கவுஸ், 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பா ணம். C4778)

உத்தியோகம் பார்க்கும் இருவருக்கு சமயல் உட்பட வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. N. M. S, 2, நியூ மார்க் கட். ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். அல்லது 443 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பா ணம். தொலைபேசி, 23890. [C-4781]

## மணப்பந்தல்

சவுதிஅரேபியாவில் வேலை பார்க்கும் உயர்வேளாளகுல சைவமதத்தைச் சேர்ந்த 29 வயதுடைய மணமகனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த படித்த மணமகள் தேவை. சீதனம், குடும்ப விபரங்கள் என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: C 4763, C/o ஈழநாடு, யாழ்ப் பாணம். (C 4763)

## வைத்தியம்

மூலரோகங்கள், வாதரோ கங்கள், சருமரோகங்கள், எக்ஸிமா, தொய்வு, பீனி சம், தலைவலி, முடியுதிர்வு, அகாலநரை, நரம்புத்தளர்ச்சி, நீரழிவு, மாதவிடாய் கால வேதனைகள், மகப்பேற் றின்மை, குழந்தைகட்கும் சித்த ஆயுர்வேத சிகிச்சை பெறலாம். Dr. R. மங்களாம் பிகை D A M., Dr R. இலட்சு மண ஐயர் D.A.M. மங்கள டதி வைத்தியசாலை, பண்டா ரக்குளம் பிள்ளையார் கோவி லடி, 41/5, சங்கிலியன் வீதி, நல்லூர். [C 4580]

## சேவை

நவீன இயந்திரங்களின் உத வியுடன் 1 மணி நேரத்தில் கலர் பிலிம் சுருள்களை கழுவிக் கொடுக்கும் சேவையை ஆரம் பித்திருக்கின்றோம். அத்து டன் கறுப்பு-வெள்ளைப் புகைப் படங்களையும் உடனுக்குடன் பிரதி பண்ணிக் கொடுக்கப் படுகின்றது என்பதையும் தெரியப் படுத்துகின்றோம். குயிக் ஸ்ரார் கலர் சேவிஸ், 163, நாவலர் வீதி, யாழ்ப் பாணம். C 4730

தட்டச்சு இயந்திரங்கள் [Type-writers] சிறந்த முறை யில் திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: Fudo Enterprises, 39/17, Power House Rd., [3ம் ஒழுங்கை] யாழ்ப்பாணம் Branch: Jaffna Road, Manipay. [Sivha Studio-Bitsman அருகாமையில்] (C-4745]

## தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை நகுலசபா நாதன் கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறை. என்பவருடைய அடையாள அட்டை நாரந்தனையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர் கள் கீழ்க்குறிப்பிட்ட விலா சத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப் படும். R. இராமலிங்கம், சர வணை மேற்கு, வேலணை. (C-4780)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் முதலிலேயே ஆக்கப் படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் கோவில் வீதி 70ம் இலக்கம் காலஞ் சென்ற இருளப்பர் இறஞ் சிற் கனகசபை என்ப வரின் மரணசாதனத்தின் மரணச் சொத்தின் விட யத்தில்.

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/3985

இருளப்பர் இறஞ்சிற் கனகசபை கைம்பெண் அன்புமலர், 70, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்குமேலேபெயர் குறிப்பிடப்பட்டதுமான மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற் காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1986ம் ஆண்டு ஆவணி மாதம் 7ந் நாளன்று அதில் அதற் கிணங்க முதலிலியே முற்றான கட்டளை பதியப்பட்டுள்ள தெனவும் இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

1986ம் ஆண்டு ஆவணி மாதம் 7ந் திகதி.

நீதிமன்ற கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைதல்:
சி. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
C 4703

---

### முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கண்டுக் குளியில் வசித்து காலஞ் சென்ற ஜோய் கதிரவேலு ரெட்ணானந்தம் பெண் எமிலி பாக்கியம் என்பவ ரின் மரணசாதனச் சொத் துக்கள்விடயமாக.

மரணமெய்தியவர்.
வழ.இல. தத்துவம்/3986

1. ஜோய் கதிரவேலு ரெட்ணானந்தம்,
2. திருமதி பத்மசுந்தரி பிரெக்கன்றிஜ், இருவ ரும் 17, கச்சேரி நல் லூர் வீதி, யாழ்ப்பா ணம்.

மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டது மான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்ப தற்காக மேற்படி நீதிமன்றத் தில் தொடுக்கப்பட்டுள்ளதெ னவும், 1986ம் ஆண்டு புரட் டாதி மாதம் 26ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலி லேயே முற்றான கட்டளை பதி யப்பட்டுள்ளதெனவும் இத் தால் அறிவிக்கப்படுகின்றது.

1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைந்தது.
ச.செ.மகாதேவன்.
மனுதாரின் சட்டத்தரணி.
(C-4720)

---

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற புலோலி தெற்கு கதிர்காமர் சுப்பிர மணியம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

சுப்பிரமணியம் கைம் பெண் சின்னச்சிப்பிள்ளை புலோலிதெற்கு, புலோலி.

-மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 1248/ T

(எதிர்)

1. சுப்பிரமணியம் லோக நாதன், செட்டித்தெரு, பருத்தித்துறை.
2. கணபதிப்பிள்ளை விநாசித் தம்பி பெண் பாறுபதிப் பிள்ளை, புலோலிதெற்கு, புலோலி.
3. நல்லதம்பி சப்பிரமணி யம் பெண் தில்லைநாயகி, புலோலி தெற்கு, புலோலி.
4. சுப்பிரமணியம், கணேச லிங்கம், சாரையடி, புலோலி தெற்கு, புலோலி.

—எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப் பட்ட இறந்துபோனவரின் மர ணச் சொத்தை நிருவகுப்ப தற்பாக மேற்படி நீதிமன்றத் தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ள தென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும், 1986ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 7ஆந் நாளன்று முற் பகல் 9-45 மணிக்கு இந்நீதி மன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னு றுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப் படலாகாதென்பதற் குக் காரணங்காட்டுமாறு, இத் தால் தேவைப்படுத்தப்படுகின் றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
(ஒப்பம்)
சண்முகம் நடராசா,
பதிவாளர்.

ஆக்கம்:
இராமசுவாமி
சதானந்தன்,
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்,
புலோலி தெற்கு,
புலோலி.

1986ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

[C 4777)

---

## இன்றைய பலன்

திகதி:- 7- [23-9-86]
மாதம்: புரட்டாதி
கிழமை:- செவ்வாய்.
நட்சத்திரம்: கார்த்திகை

மேடம்: முன்னேற்றப் பாதையில் தடைகள் பல உரு வாகும், குறைகேட்கநேரிடும், பிரயாணத்தைப் பின்போடு வது நன்று.

இடபம்: கல்வித்துறையில் முன்னேற்றம்காணும், கருத்து வேற்றுமைகள் மறைந்து நல்லமுடிவு ஏற்படும். காத லர்களுக்கு கனிவான தினம்.

மிதுனம்: துயரத்தின் நிழ லாட்டம் உங்களைத் தொட ரும், புதிய முதலீட்டை இன்று தவிர்த்துத்துக் கொள் ளவும், குடும்பச் சச்சரவுகளும் தென்படலாம்.

கடகம்: சுற்றுடலில் மதிப் புயரும், அன்னிய வாசத்திற் குமிடமுண்டாம், தானிய விருத்திக்கும் இடமுண்டு.

சிங்கம்: தொழில் செய் வதற்கு முதலீடு செய்யலாம்' வெள்ளிப்பணம் இன்று வேண் டியளவிற்குத் துள்ளும், வாழ்க்கையில் வசந்தம் நில வும்.

கன்னி: எதிரிகளின் சூழ்ச் கள் பலமாகவிருக்கும், உடல் நலமும் பாதிக்கப்படலாம், பொருளும் நழுவக்கூடும்,

துலாம்: களஸ்திரசுகமுண்டு கண்ணியமான நடவடிக்கை களை மேற் கொள்ளுவீர்கள், பயனுள்ள சந்திப்பும் இன்று நிகழும்

விருச்சிகம்: சிறிய விபத்துக் கும் இடமுண்டாம், அரசியல் வாதிகளுக்கு இன்று அடிசறுக் கலாம், வீண்செலவுகளும் அதிகரிக்கலாம்.

தனுசு: தந்தைவழிமூலம் சுகசெய்திக்குமிடமுண்டாம், நினைத்தகாரிய சித்திக்குமிட முண்டாம். யாத்திரைப்பிரிய முண்டு.

மகரம்: அன்னியர் உதவி யுண்டு, குறிக்கோள் வெற்றி யுண்டு, குடும்பத்திலும் இனி மையுண்டு, தொழிலில்மகிழ்ச்சி யுண்டு.

கும்பம்: பிறபொருள் வரவு முண்டு, எதிலும் மனத்திருந்தி காணும், சகோதரவழி சுப கருமமும் ஏற்படலாம், சுப தினம்.

மீனம், எதிலும் தடுமாற் றம் தென்படும், வரவில் திருப்தியற்ற நிலைதென்படும், குடும்பத்திலும் பூசல்கள் தோன்றும்.

திருமலை
வேலுப்பிள்ளை

---


## SCIENCE CENTRE
### KARAVEDDY

புதிய வகுப்புகள்

தூய/பிரயோக கணிதம் — திரு. ஆறுமுகம்
பௌதீகம் — திரு. சூரியகலாமணி, யோகா
இரசாயனம் — திரு. தில்லை, பார், பீற்றர்
தாவரவியல் — திரு. குகன், சர்வா
விலங்கியல் — திரு. தம்பிராஜா

ஆரம்பம் 24-09-86 பி. ப. 3 மணி

(C-4783)



## மேலதிக ஆட்கள் தேவை

(1) COOKS - able to prepare Eastern, Chinese meals and short eats.
(Age 30-40 male/female)
Salary Rs. 1000 - 1300/-

(2) Accounts Clerk/Office Assistant - female
(Age 24 - 35)

நேரில் வரவும்: [24-9-86 - 9-00 a. m]
RSR Green Peking Palace
69G, 4th Cross St.
Jaffna. A 1350

## மணிவாக்கு

புத்திசாலியான பெண் தன் வீட்டைக் கட்டுவாள்; புத்தியில்லாதவளோ அதைத் தன் கையாலே பிடுங்கி யெறிவாள்.

—பைபிள்

## நமது நோக்கு

# தமிழ்மாநிலத்தின் அச்சாணி

தமிழருக்கொரு மாநில ஆட்சி என்றோ கிடைப்பது உறுதியாகின்றது.

இதுவரையும்சிந்தப்பட்ட இரத்தம் ஆறுய்ப்பெருகி அந்த இலக்குக்கு இட்டுச் செல்வதை எவராலும் தடுக்கமுடியாது.

'இரத்தத்தை இரத்தத் தால் கழுவிவிட முடியாது' என்பது பாரசீகபழமொழி.

கிழக்கு மாகாணத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்த தமிழரை விட. இன்று வந்து குடியேறிய சிங்கள மக்களுக்கு அதிக உரிமைஉண்டு என்ற வாதம் இரத்த வடிவம் எடுத்திருக்கிறது.

ஒழுங்குமுறை தவறிய போரில் இனக்குரோதமே மேலிட்டிருப்பது கண்கூடு. இதனைத்தூண்டிவிட்டஅரச ராணுவமும் ராஜதந்திரமும், அதனை அடக்கமுடியாது திண்டாட்டப்படுவதையே ஊரடங்கு நிரூபிக்கிறது.

தமிழ் மக்கள் சிந்தும் இரத்தம் ஆறில்லாவறண்ட பூமிக்கு வளமளிக்கிறது. இந்த நிலையில் அங்குவாழும் அப்பாவித் தமிழர், முஸ்லிம் சகோதரர்கள் ஆட்சிக்கு ஆதரவாயிருப்பது முயற் கொம்பு.

போரை மட்டுப்படுத்தி, 'பயங்கரவாதமென்று' குறிப்பிடப்படும் தமிழ் இளைஞர்களின் தாக்குதல்களை முறியடிக்க முடியுமானால் ஊரடங்குச் சட்டத்துக்குத் தேவை ஏது?

மாண்டுமடிந்துபோனமக்களைவிட, ஆயிரக்கணக்கில் வாழ வழிதெரியாது தவிக்கும் ஏனையோருக்கு இன்னும் கூடிய இடர் விளைவிக்கவே ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நினைத்தபடி மக்களைச் சுட்டுத்தள்ள வாய்ப்பளிக்கும் பயங்கரமான, பரிதாபமான நடவடிக்கை இது.

இரண்டு தமிழ்மந்திரிகளைக் கொண்ட மட்டக்களப்பு மாநிலத்தில் தமிழ்ப் போராளிகள் ஊரடங்கு உத்தரவை நிர்ப்பந்திக்கும் நிலைக்கு அரசை ஆட்டிவைக்க முடிந்தது எதனைக்காட்டுகின்றது?

சிறிமாவோ மீண்டும் ஆட்சி நடத்தும் வாய்ப்புப் பெற்றால், தமிழர் போராட்டம் மடிந்துவிடும் என்பதற்கில்லை. பௌத்த சங்கமும், அம்மையாரும் எவரும் வெளிப்படுத்தாத இரகசியத் திட்டங்களைக் கொண்டு பௌத்த சிங்கள மக்களின் ஆதிக்கத்தை பேணிப்பாதுகாப்பாரென்று நினைப்பதற்கும் ஆதாரம் ஏது.

இதுகாறும் ஒருவரை ஒருவர் வெருட்டி ஆட்சியைகைப்பற்றிய அரசியல் புருடா இன்று செல்லாக் காசாகிவிட்டது.

அம்மையாரின் மருகனை இரண்டவது விஜயன் என்றுவிகடமாகக் கூறப்படுபவர்-தமிழரின் துன்பத்தைத் துடைக்க முன்வந்துள்ளாரென்றால் சிங்கள சமூகத்தில்- பெருமைமிகுந்த சமூகம்- சிந்தனை மாற்றம் ஏற்பட்டிருப்பது தெரிகிறது.

கூட்டங்களில் குண்டு வீசுவது, இன்று, பொங்கல் விழாவில் அல்லது வெசாக் கொண்டாட்டத்தில் சீனவெடி கொளுத்துவது போன்றது. பலர்காயமடையலாம்சிலர்மரணமுமடையலாம், இன்றுநூற்றுக்கணக்கில், ஆயிரத்தில் கொல்லப்படும் தமிழ் அப்பாவிகளுக்கு இது எந்தமூலைக்குக் காணும்.

அப்பாவி சிங்கள மக்களுக்கு தமிழ் பிரதேசங்களில் காணப்படும் பேரழிவு தெரியாது. அதில்அதிக அக்கறையும் இல்லை. ஆனால் அகில உலகிலும் இலங்கையில் தமிழ்மக்கள், இளைஞர்கள் கொலை, சித்திரவதை போன்ற கொடுமைகளுக்கு பல வருடங்களாகப் பலியாகின்றனர் என்ற கண்டனம் அவர்களைத் துயிலெழுப்பும் வல்லமை பெற்றிருக்கிறது.

ஜனாதிபதியின் பிறந்த தினவைபவங்களோ பிரதமர் பிரேமதாசா இந்தியப் பிரதமருக்கு விடுத்த பலத்த சவாலோ இங்கு நடைபெறும் சண்டையில் வெற்றிகொள்ள உதவாது.

இந்தியா தலையிட்டு இந்தப் போரை நிறுத்த உதவவேண்டுமென்று உளமார நினைக்கும் ஆட்சித் தலைவர்கள், சிறிமாவோவின் வெருட்டுக்கும், சங்கத்தினரின் "சண்டித்தனத்துக்கும் தயங்குவது கண்கூடு.

உண்மை வெளிவரும்; தமிழ்மக்கள், வாழையடி வாழையென வாழ்ந்த பிரதேசங்கள் அவர்களின் சுயாட்சிக்கு உரித்தாவது மறுக்கமுடியாத முடிவு.

---

மட்டுநகர் சம்பவம்:

# 'வெளிநாட்டு நீதிபதிகள்குழு விசாரணைநடத்தவேண்டும்'

## பரு. வர்த்தக சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்

மட்டக்களப்பில் நடந்த தாக்குலில் 13 பேர் பலியாகி பலர் காயமடைந்த சம்பவத்திற்கு பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது

பருத்தித்துறை வர்த்தகர் சங்கச் செயலாளர் திரு ந. சிவசுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இச்சம்பவம் பற்றி தெரிவித்திருப்பதாவது:

"மட்டக்களப்பு நகரில் பாதுகாப்புப்படையினரால் பதின்மூன்று பேர் கொல்லப்பட்டதாகவும், மேலும் நாற்பது பேர் பாதுகாப்புப்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டு எரிக்கப்பட்டதாக வெளியான செய்தியினால் நாம் அதிர்ச்சியும், கவலையும் அடைவதுடன் இது நாகரீக சமூகத்தில் ஒரு பெரும் இழுக்கையும் நீங்காத வடுவையும் ஏற்படுத்தியுள்ளதென வன்மையாகக் கண்டிக்கிறோம். பாதுகாப்புப் படையினரின் இந்த அடாவடித்தனத்திற்கு அரசுபொறுப்பேற்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதுடன் இத்தகைய அடாவடித்தனமும் அடக்குமுறையும் தொடர்ந்தும் தமிழ் பேசும் மக்கள் மீது திணிக்கப்படுவது தமிழ்பேசும் மக்கள் இந்த நாட்டில் சுதந்திரமாக, கௌரவமாக வாழமுடியாது, வேண்டியபடி வேட்டையாடப்படும் வேண்டாத மக்களாகவே வாழ்கிறார்கள் என்ற உண்மையை மேலும் வலியுறுத்துகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம் இதுபற்றி ஒரு சுதந்திர, நீதிவிசாரணை வெளிநாட்டு நீதிபதிகளைக்கொண்டு நடாத்த வேண்டுமென்று கோருகிறோம்.

மனிதாபிமானமற்ற, இந்த செயலால் பாதிப்புற்ற மக்களுக்கு மட்டக்களப்பு பிரஜைகள் குழுமூலம் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துகொள்ளுகின்றோம்." [இ]

---

# 5-ம் வகுப்பு மாணவருக்கான தமிழ் பாடப்புத்தகம்

ஐந்தாம் வகுப்புத் தமிழ் மாணவருக்கான இலவச பாடநூல் 1980 லும் பின்னர் 1984 லிலும் தற்போது 1986 செப்டம்பரிலும் விநியோகிக்கப்பட்டுள்ளது. இடையில் பல ஆண்டுகள் புதிய தமிழ் புத்தகம் விநியோகிக்கப்படாதிருக்கவே 1980 ல் விநியோகிக்கப்பட்ட தமிழ் மலரே இன்றுவரை பாடநூலாக இருக்கின்றது.

1986 செப்டம்பரில் தமிழ் புத்தகம் விநியோகிக்கப்பட்டதால் அதனைத் தற்போது ஆறும் ஆண்டு மாணவர் படித்துப்பயனடைய மாட்டார்கள். மூன்றும் தவணைப் பரீட்சைக்கு இன்னும் மூன்று மாதங்களே இருக்கின்றன. புதிய ஆறும் ஆண்டுத் தமிழ் 220 பக்கங்களை உடையது. இந்நூலில் 36 உரைநடைப் பாடங்களும் 8 செய்யுள் பாடங்களும் இருக்கின்றன.

## மக்கள் கருத்து

தமிழ் மலர் 5ம்- வகுப்புப் புத்தகத்தில முதலாம் பாடம் கடவுள் வாழ்த்து எந்த மத மாணவருக்கும் கடவுள் வாழ்த்து முக்கியமானது.

புதிய வெளியீட்டில் கடவுள் வாழ்த்து இல்லாது வளரும் பயிர் என ஒருகதை இருக்கின்றது. பழைய புத்தகத்தில் ஒவ்வொருபாடமுடிவிலும் வினாக்கள் இலக்கணங்கள் விரிவாக எழுதப்பட்டுள்ளன. புதிய நூலிலோ நான்கு பாடத்திற்கு ஒன்றாக மொழிப் பயிற்சி மட்டும் தரப்பட்டுள்ளது.

பழைய தமிழ் மலரில் 5ம் பாடம் நவாலியூர் சோமசுந்தரப் புலவர். புதிய தமிழ் புத்தகத்தில் புலவர் பாடம் நீக்கப்பட்டுள்ளது.

ஒரே ஒரு தமிழ் பெரியார் பற்றி தமிழ் வளர்த்த சி. வை. தமோதிரம்பிள்ளை பற்றி அதுவும் 39ம் பாடமாகச் சேர்க்கப் பட்டுள்ளது.

பழைய புத்தகத்தில் 18 ம் பாடம் டாக்டர் டி. பி. ஜாயா. புதிய புத்தகத்தில் இவர் பற்றி எதுவும் இல்லை. இதற்குப்பதிலாக வேறு சில முஸ்லீம் பெரியார்கள் பற்றி எழுதப்பட்டுள்ளது.

நவாலியூர் சோமசுந்தரப் புலவருக்குப் பதில் தி. வை தாமோதிரம்பிள்ளை பாடம் 39ம் பாடத்திற்குப் பின் தள்ளப்பட்டுள்ளது.

எல்லாளன் பற்றிய நான்கு பக்கக் கட்டுரை புதிய புத்தகத்தில் கைவிடப்பட்டுள்ளது சிங்கள மக்கள் தமிழ் அரசனுக்கு செலுத்திய மதிப்பும் மரியாதையும் இக்கட்டுரையில் சொல்லப்பட்டிருந்தது.

தமிழ் மலரில் இருந்த நன்நெறி 1, 2 புதிய தமிழ் புத்தகத்தில் நீக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது அதேபோன்று பொலனறுவை என்ற பாடத்தில் பொலனறுவை அநுரதபுரியில் தமிழ் அரசர் ஆட்சி செய்தது பற்றியும் பொலனறுவையிலுள்ள சிவாலயம் பற்றியும் இந்த நகரங்கள் இரண்டும்தமிழரின் பழைய தலைநகரமாக விளங்கியது என்றும் சொல்லப்பட்டது. புதிய புத்தகத்தில் இப்பாடமும் நீக்கப்பட்டு விட்டது.

மகாபராக்கிரம பாகுவும் அவனது ஆட்சிபற்றியும் மட்டும் எழுதப்பட்டுள்ள புதிய தமிழ் புத்தகத்தில் தமிழ் அரசர்பற்றி எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை ஆனால் அந்தப்பாடத்தின் முதலாவது கேள்வியாக இலங்கையை ஆண்ட தமிழ்அரசர் இருவரின் பெயர்களைக் கூறுங்கள் எனகேள்வி ஒன்று இருக்கின்றது, இதன் அர்த்தம் ஆசிரியர்களுக்கு புரியவில்லை.

புதிய தமிழ் 6ம் ஆண்டு வெளியீட்டுக்குழுவில் 3 தமிழர் 3 முஸ்லிம்கள் இடம்பெற்றுள்ளனர். தமிழர் பிள்ளைகள் பெரும்பான்மையினர் படிப்பதற்காக எழுதப்பட்ட இப் புதிய தமிழ் புத்தகத்தில் தமிழர் கலை கலாச்சாரம் ஆட்சி அல்லது திருக்குறள் நன்னெறி எதுவும் எழுதப்படாததேனோ?

இவ்வாறு இலவசமாகவழங்கும் ஏனைய தமிழ் பாட நூல்களையும் தமிழ் அறிஞர்கள் ஆராய்ந்து பாடநூல் சபைக்குத் தமது கருத்துக்களைத் தெரிவிக்கமுன்வரவேண்டும்.

— ந. சிவபாதம்

---

## புரட்டாதி சனி விஷேச ஹோமம்

யாழ்ப்பாணம். செவ்

புரட்டாதி மாத சனிக்கிழமையை முன்னிட்டு அராலிவடக்குசிவன்கோவிலில் சனிக்கிழமை தோறும் விஷேச ஹோமமும் அபிஷேகம்நடைபெற்று வருகின்றது.

இம் மாதம் இரண்டாம் சனிக்கிழமையான 27 திகதி 8-30 மணிக்கு ராகு கேது சனீஸ்வரனுக்கான விஷேச ஹோமம் சிறந்த சிவாச்சாரியர்களால் நடாத்தப்படவிருகின்றது. [ஆ]

---

## இலவச பாலபண்டித வகுப்புகள்

யாழ்ப்பாணம், செவ்.

நாவலர் சைவத் தமிழ் பண்பாட்டு நிலையம் வார இறுதி நாட்களில் பிரவேச, பாலபண்டித வகுப்புக்களை இலவசமாக நடத்தவுள்ளது.

இவ் வகுப்புகளில் சேர்ந்து கற்க விரும்புவோர் விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் யாழ் வண்ணை நாவலர் மகாவித்தியாலய அதிபரிடம் பெற்று அடுத்த மாதம் 3 ம் திகதிக்கு முன்னர் அவரின்முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ் வகுப்புகள் அடுத்த மாதம் 12ம் திகதி காலை வண்ணை நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளரும், மேற்படி பண்பாட்டுக் கழகத் தலைவருமான திரு. இ. சுந்தரலிங்கம் இவ் வகுப்புகள் நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். [மா]

---

சுவாமி இராமகிருஷ்ணர்

# "ஏழைகளுக்கு உதவ வழிவகுத்தார்"

நெல்லியடி, திங்கள்

கடவுளை காளி உருவத்தில் நேருக்கு நேராகக் கண்ட பெருமை சுவாமி இராமக்கிருஷ்ணருக்கே உரியது. உலகில் இறைவனையே தஞ்சமென்றுவாழும் ஏழைகளுக்கு. தனது பிரதம சீடரான சுவாமி விவேகானந்தர் மூலம் உதவ முற்பட்ட சுவாமி இராமக்கிருஷ்ணர் அவர் மூலம் 1887 ஆம் ஆண்டு மே மாதம் முதலாந் திகதி ஸ்ரீ இராமக்கிருஷ்ண மடத்தை உருவாக்கினார். இதன் மூலம் மக்கள் சமுதாயத்துத்துக்கு சுயநல மற்ற சந்நியாசிகளின் சேவையைப் பெற்றுக்கொத்தார்.

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராமக்கிருஷ்ண சாரதா சேவாச்சிரமப் பிரதமகுரு ஸ்ரீசித்ருபானந்தா ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி வழாவில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

தொடர்ந்துபேசிய சுவாமி சித்ருபானந்தா இன்று உலகில் ஸ்ரீ இராமக் கிருஷ்ண மடங்களின்சேவை போற்றிப் பாராட்டப்படுவதாகக் கூறினார்.

வைத்திய கலாநிதி எம் கே. முருகானந்தம், சட்டத்தரணி எம். கே. முத்தக்குமார மற்றும் பலர் இவ் வைபவத்திற் கலந்து கொண்டனர். [இ]

# ‘இன்றைய மாணவர்களே எதிர்காலத் தலைவர்கள்’

பருத்தித்துறை, திங்கள். மாணவர்கள் கல்வி அறிவைப் பெற்றுக்கொள்வதுடன் வாழ்க்கைக்கு வேண்டிய தலைமைத்துவ, நற்பண்புகளையும் பெற்றுக்கொள்வதன் மூலமே அவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைய முடியும். பரீட்சைகளில் சித்தியடைவதுதான் கல்வியின்பயன் என்று கருதக்கூடாது. வாழ்க்கையின் உயர்ந்த நெறிமுறைகளை இயற்றுவதற்கு கல்வி பயன்பட வேண்டும்''.

இவ்வாறு பருத்தித்துறை வட இந்துமகளிர்கல்லூரிஉயர் வகுப்பு மாணவிகளின் ஒன்றுகூடல் நிகழ்ச்சியிலே பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். பிரதம கல்வியதிகாரி திரு. வி. தங்கராஜா குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி மாணவர் தலைவி செல்வி வி. வசந்தமாலர் தலைமைதாங்கினார். நிகழ்ச்சிக்கான சகல ஒழுங்குகளையும் வர்த்தகத்துறை ஆசிரியர் திரு. எம். என். யோகராஜாமேற்கொண்டிருந்தார். தொடர்ந்து உரையாற்றிய பிரதம கல்வியதிகாரி திரு. தங்கராஜா: ''இன்றைய மாணவர்களே இந்நாட்டின் எதிர்காலத் தலைவர்களாவர். எனவே மாணவ சமுதாயத்தை நாட்டிற்குகந்த சிறந்த சமுதாயமாக உருவாக்கும் தூய்மையான பணியினை ஆசிரியர்கள் திறமையாக மேற்கொள்ளவேண்டும். இதுபோன்ற ஒன்றுகூடல் நிகழ்ச்சிகள் மாணவர்களிடையே பரஸ்பர நல்லெண்ணம் புரிந்துணர்வு அன்னியோன்னிய தொடர்புகளை ஏற்படுத்த சிறந்த சாதனங்களாகும்'' என்றார்.

கல்லூரி அதிபர் திரு. எம், சுப்பிரமணியம் பேசுகையில்:

' மாணவர்கள் ஏட்டுக்கல்வியினால்மட்டும் பூரண அறிவை பெற்றுக்கொள்ள முடியாது வாழ்க்கையில் எவ்வாறு சிறப்பாக வாழவேண்டும் என்பதையும் வாழ்க்கையின் நெறிமுறைகளையும் அறிந்துகொள்ள வேண்டியது மிகமுக்கியமாகும்'' என்றார்.

இந்த ஒன்றுகூடல் நிழ்ச்சியிலே யாழ் கல்வித்திணைக்கள வர்த்தகக் கல்வியதிகாரி திரு. எஸ் செல்லத்துரை, விவசாயக்கல்வியதிகாரி செல்வி ரி. பெரியதம்பி, புலோலி கொத்தணி அதிபர் திரு. வீ. எஸ். ஏகாம்பரநாதன், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி அதிபர் திருமதி அரியரட்ணம் ஆகியோரும் விருந்தினர்களாகக் கலந்துகொண்டு உரையாற்றினர்.

பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவிகளுக்கும் நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கும் பிரதம விருந்தினர் திரு. தங்கராஜா பரிசில்களை வழங்கினார். செல்வி. கார்த்திகாஜினி நன்றிகூறினார். [இ]


## பிரயாண ஒழுங்குகள்

★ சிங்கப்பூர்: (கட்டிடப்பகுதி லேபறேஸ்)
★ சிங்கப்பூர்: (கவுஸ் மெயிட்ஸ்)
★ லிபியா: (ஒயில் கொம்பனி வேக்கேஸ்)
★ குவைத்: (கவுஸ் மெயிட்ஸ்)
★ குவைத்: (பெண் ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்)
★ குவைத்: (ஆண் ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்)
★ குவைத்: (மெயின்ரனன்ஸ் கிளீனேர்ஸ்)

இவ்விடங்களுக்கு வருமான ஒழுங்குகள்பெற விரும்புவோர்
**உடனடியாக 7 படம், பாஸ்போட்**
முதலிய ஆவணங்களுடன் எங்களிடம் நேரில் வரவும்:
**பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங்**
உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

**யூனிவேசல்** ஏஜென்சி
**125, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.**
(பெற்றேலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக, ஆயுர்வேத கல்லூரி அருகாமையில்)
(A 1338)


## Sri Lanka
## National Salt Corporation

Vacancies for seasonal Clerks for Accounts Department at Northern Region (Elephant Pass, Regional Office).

Applications are invited for the above posts with the following qualifications:

1. Should have been successful at the G. C. E. (A/L) with 04 subjects.
2. Pass in the English Language at the G. C. E. (O/L).

AGE: Below 25 years as at 10-10-86.

SALARY: Rs. 10/- per day (exclusive of all the other allowances payable by the Corporation).

Your Bio-Data with the relevant certificates should reach on or before 10-10-86 to the following Address:-

REGIONAL MANAGER (NORTHERN REGION)
SRI LANKA NATIONAL SALT CORPORATION,
ELEPHANT PASS. (A-1289)

## அரைஇறுதி ஆட்டத்திற்கு தெரிவு

வல்வெட்டித்துறை, திங்சுள் ஞகம் கலைவாணி விளையாட்டுக்கழகத்தினரால்நடாத்தப்பட்ட ஏழு பேர் கொண்ட நொக்கவுட் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின்கால் இறுதி ஆட்டத்தில் 'வல்வெட்டித்துறை புளூஸ்' விளையாட்டுக் கழகம், 'குருநகர் பாடும்மீன்' விளையாட்டுக சழகத்தை 4-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அரைஇறுதி ஆட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (இ)

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

சுழிபுரம் தொல்புரம் என்னுமிடத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற குமாரசாமி நமசிவாயம் என்பவரின் மரணசாதனம் எழுதப்படாத மரணச்சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி/274

குமாரசாமி நமசிவாயம் கைம்பெண் சிகலாவல்லி அலைதுகலாவல்லி தொல்புரம், சுழிபுரம்.

மனுதார்.

எதிராக

1. சின்னப்புரவீந்திரன்
2. பெண் சத்தியதேவியும்

பராயமற்றவர்கள் -

3. குமாரசாமி நமசிவாயம் மகள் குமுதினி
4. குமாரசாமி நவசிவாயம் மகள் புஷ்பகலா
5. குமாரசாமி நமசிவாயம் மகள் நளாயினி
6. குமாரசாமி நமசிவாயம் மகள் சிவதர்சினி

எல்லோரும் தொல்புரம்சுழிபுரம்(பராயமற்ற 3-6ம் எதிர் மனுதார்களின் பாதுகாவலன் 7-ம் மனுதார்.)

7. சிவலோகநாதன் தேவராசா முத்துமாரி அம்மன் கோவிலடி. திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்துக்களை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு ஆடி மாதம் 9ம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு ஆவணி மாதம் 27ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
வி. இராமச்சந்திர ஐயர்,
பதிவாளருக்காக

வரைவு,
க. குணரத்தினம்.
மனுதாரின் சட்டத்தரணி.

27-8-86 காலம்காட்டுட தவணை 8-10-1986வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வி. இராமச்சந்திர ஐயர்,
C 4708 பதிவாளருக்காக.

## முதலாண்டு நினைவஞ்சலி



கைலாசபிள்ளை சபாபதிப்பிள்ளை.
தோற்றம்: 21-03-1938
மறைவு: 01-09-1985

தென்றல் ஒடு வாழ்ந்துவிட்ட எங்கள் தெய்வம் தெவிட்டாத உன் முகத்தில்தெளிவு குன்றியதேன். ஆறுதல் தேடி ஓர் அரச வைத்தியசாலை சென்றிருந்தீர். அங்கு உமக்கு நடந்ததோ ஆண்டவன் தீர்ப்பு. திருமுகத்தை காண்பதற்கோ தேடி வந்தோம், தெருவெங்கும் அரக்கர்களின் அட்டகாசம், பாதிவழியில் எம்மைவிட்டு பரலோகம் சென்று விட்டீர் பாவிகள் மனதையெல்லாம் புண்ணாக ஆக்கிவிட்டீர் என்றுமே எம்மனதை விட்டகலா உம்உருவம்இன்னுமொரு தடவை எம்மடிமேல் பிறக்க மாட்டீரோ.

உங்கள் பிரிவால்வாடும்;
மனைவி, மைத்துனர், சகோதரர்கள், நண்பர்கள்.

சபாஸ்தம்பி தையல் நிலையம்,
காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பழை C 4756

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சிவகராசா அந்தோனிப்பிள்ளை
(பிரபல சமூக சேவையாளர் அச்சுநகர்)
மலர்வு: 14-04-1924
உதிர்வு: 23-09-1984

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் ஊர்மக்களின் நலனுக்காக பிரகாசித்து அன்போடும், பண்போடும், பாசத்துடனும் எம்மை எல்லாம் காத்து நின்றுக் குலவிளக்காய் குதூகலத்தை எமக்களித்தாய், குமுறும் துயர் வெள்ளத்தில் எம்மை அழுத்தி விட்டுச் சென்றீர், இரண்டாவது நினைவு நாளில் அன்னாரின் ஆன்மசாந்திக்கு அச்சுநகர் புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கற் பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உமது பிரிவால் துயருறும், அன்பு மனைவி, தாய், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ரேஸ் மகலால், அச்சுவேலி. C 4769

## அந்தியேட்டி, வீட்டுக்கிரியை அழைப்பு

திரு. இ. நா. விசுவலிங்கம்

அன்புடையீர்!

24-08-86 அன்று இறையடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் அமரர் நா. இ விசுவலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை 23-09-86 செவ்வாய்க்கிழமைஇன்று காலையில் புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவிலடி தென்கரையிலும், வீட்டுக்கிரியை இன்று ''திருத்தணிகை'' இல்லத்திலும் நடைபெறும். ஆகவே உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வழைப்பை ஏற்று வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்குப்பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். அன்னாரின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

இங்ஙனம்,
திருமதி ஆ. விசுவலிங்கமும், குடும்பத்தினரும்.
திருத்தணிகை,
புங்குடுதீவு-11. [C 4772]

## 90-வது நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



ஸ்ரீரங்கநாதன் முருகதாஸ்
தோற்றம்: 05-04-1962
மறைவு: 25-06-1986

அருமை முருகதாஸ்! மின்னாமல், முழங்காமல் இடி திடீரென விழுந்ததே! மறுநாள் கொழும்பு செல்ல இருந்த உன்னை ஏன் தம்பி உயிரில்லா உடம்பாகப் பார்க்க நேர்ந்தது 'எங்கே எங்கள் முருகதாஸ்?' என்றெல்லாம் கேட்டு எழுதுகின்றனர் வெளிநாட்டிலுள்ள உன் நண்பர்கள், இவர்களுக்கு யாது கூறுவது? காலம் தான் பறக்கிறது. ஆயின் உன் நினைவு எம் நெஞ்சைவிட்டகல மறுக்கிறது; எங்கள் உயிர் உள்ளவரை உன்னை மறவோம், இது சத்தியம்! உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

எங்கள் அன்புச் செல்வத்தின் இறுதிச் சடங்குகளில் பங்கு பற்றியோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் மலர்மாலை, மலர் வளையங்கள் அனுப்பியோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அப்பா, அம்மா, அம்மம்மா, பெரியம்மா, மாமன்மார், மாமிமார், மைத்துனிமார், மைத்துனன்.
C 4771

ஒட்டுசுட்டான்

# நீர்ப்பாசன அலுவலகத்தை இடம் மாற்ற ஏற்பாடு

ஒட்டுசுட்டான், திங்கள் ஒட்டுசுட்டானில் ஏற்பட்டுள்ள பதற்றநிலைகாரணமாக இராணுவமுகாமிற்கு எதிரில் உள்ள நீர்ப்பாசன அலுவலகத்திற்கு உத்தியோகத்தர் அச்சம் காரணமாக கடமைக்கு செல்லத்தயங்குவதாக நீர்ப்பாசன பொறியியலாளர் திரு என் சோதிராசாவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக அவர் பிரதி நீர்ப்பாசனபணிப்பாளர் கவனத்திற்கு கொண்டுவந்து நிலைமையை விளக்கினார். இதனைத் தொடர்ந்து தற்காலிகமாக கணுக்கேணி அல்லது மன்னாகண்டலுக்கு அலுவலகத்தை இடமாற்றம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (இ)

# இளைஞர் மத்தியில் பாரதி பாடல் ஒலிப்பது அவசியம்

உடுவில், திங்கள்

''பாரதியாரின் உணர்ச்சி மிக்கபாடல்கள் மக்களைவிழிப்புக் கொள்ளவைத்தன தமிழ் மொழியை மட்டுமல்லாமல் வேற்று நாட்டு மொழிகளையும் பாரதியார் நேசித்தமையால் அவர்தேசிய புலவர் வரிசையில் இடம்பெறுகின்றார். விடுதலைக்காக போராட்டம் நடத்தும் நம் இளைஞர்கள் மத்தியில் பாரதியார் பாடல்கள் தினமும்ஒலிக்கவேண்டும். ஒவ்வொரு வீடுகளிலும் பாரதியார் பாடல்கள் ஒலிப்பதன் மூலம் இளைஞர்களுக்கு உற்சாகமூட்டப்பட வேண்டும்'

நவாலி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பாரதிவிழாவில் உரையாற்றிய திரு. சிவபாதம் இவ்வாறு கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பி விழாவிற்கு தலைமைவகித்தார்.

சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலை உபஅதிபர் திரு. சுந்தரலிங்கம் தமதுரையில், பாரதியார் ஓர் தேசபக்தன் மட்டுமல்ல, என்றும் அவர் ஓர் சிறந்த சீர்திருத்தவாதியென்றும் நாட்டின் சீர்கேடுகளை தமது கவிதைகளின் மூலம் சாடியுள்ளார் என்றும் கூறினார்.

நவாலி மகாவித்தியாலய ஆசிரியர் நாகையா பேசுகையில் தொலைக்காட்சி, வானொலி, சந்திரமண்டல ஆராய்ச்சிகளை பற்றியெல்லாம் அன்றே கவிதைகள் பாடிய பாரதியார்ஒரு தீர்க்கதரிசி என்றார்.

மாணவர்களின் பாரதியார் பாடல்களும், பாரதி பாடல்களை பின்னணியாக கொண்ட கும்மி, கோலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (இ)

## அவர் செய்த தொண்டுகள்

அமரர் ந. துரைராசா பல ஆண்டுகள் மலைநாட்டில் ஆசிரியராய் பணியாற்றி தனது பிற்கால சேவையின் போது ஊரெழு கணேச வித்தியாசாலைஅதிபராக கடமையாற்றி ஓய்வுபெற்றார். இவரது சேவைக்காலம் கணேச வித்தியாலயத்தின் பொற்காலமாகும் இவரது வழி நடத்தலின் கீழ் மாணவரின் கல்வி மேம்பட்டதுடன் பாடசாலைக்கு புதிய கட்டடங்கள் அமைவதற்கும் ஆவன செய்தார்

ஓய்வு பெற்றபின் பொது நலத் தொண்டில் தன்னை ஈடுபடுத்தினார். ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய அறங்காவல் சபையின் செயலராயும் கிராம அபிவிருத்திச் சங்க பொருளாளராயும் சைவசமயக் கழக ஆலோசகராயும் சுகாதாரக்குழுவின் உறுப்பினராயும், சிறு விவசாயிகள் சம்மேளத்தின் முக்கியஸ்தராயும்பங்காற்றி பொது மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

இவரது சடுதியான பிரிவு குடும்பத்தினர்க்கும் நண்பர்களுக்கும் ஆறாத்துயரை ஏற்படுத்தியுள்ளது.

அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் கலந்த மக்கள் கூட்டமும் நிகழ்த்தப்பட்ட இரங்கலுரைகளும் பிரசுரிக்கப்பட்ட அஞ்சலிப்பாமாலைகளும் இவரது உயர்வை எடுத்துககாட்டும்

இவர் தனியே செய்த தொண்டினை பலர் கூடியே செய்ய வேண்டியுள்ளது.

அன்னாரது ஆத்ம சாந்திக்கு எமது பிரார்த்தனை.

ஊரெழு

க. முத்துக்குமாரசாமி


வெலிங்டன்

10-30, 2-30, 4-30, 6-30

பணயக் கைதிகளை மீட்க நவீன ரக ஆயுதங்களுடன் போராடும்

The Hostage

(Adults only)

லிடோ

தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30

பிரபு - நளினி நடித்த

புதிய வெளியீடு கலர்

நியாயம்


## சடலம் கரை ஒதுங்கியது

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவு கடற்பிராந்தியத்தில் படையினருக்கும் போராளிகளுக்குமிடையே கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோதலின் போது கடலில் குதித்த 4 இளைஞர்களில் ஒரு இளைஞரின் சடலம் செம்மலைக்கு அருகில் கரை ஒதுங்கியது.

இளைஞர்கள் அதையெடுத்து அடக்கம் செய்தனர். எஞ்சிய மூவரின் நிலைபற்றி தெரிந்து கொள்ள முடியவில்லை.

## கோவளம் அணி வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

கோவளம் இளைஞர் கழகத்திற்கும் காரை விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் கடந்த வாரமிடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கோவளம் இளைஞர் மன்ற அணி சிறப்பாக விளையாடி 1-0 கோல்களால் வெற்றிபெற்றது.

அன்றுநடைபெற்ற மற்றுமொரு போட்டியில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் காரை 'பி' விளையாட்டுக் கழகத்தை 1-0 கோல்களால் வெற்றிபெற்றது.

இம்முறை காரை விளையாட்டுக்கழகத்துடன் நடைபெற்ற சகல போட்டிகளிலும் கோவளம் இளைஞர் மன்றம் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

# வடமாநில பாடசாலைகளின் ஆங்கிலதினப் போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்ப்பாணம். திங்கள்

வடமாநிலப்பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட ஆங்கில தினப்போட்டி முடிவுகள் வருமாறு:

ஆண்டு 8

எழுத்து

பி. தர்மினி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, என் மணிமேகலா, மெதடிஸ்ற் உயர் கல்லூரி பருத்தித்துறை ஆர். ஐரின் மரியா, அருணோதயாக் கல்லூரி

சொல்வதெழுதல்

எம் ஞானு. உடுவில்மகளிர் கல்லூரி ஈ. ஸ்ரீரஞ்சனு, மெதடிஸ் உயர் கல்லூரி, எம்.டியோன்ஸ் யாழ்ப்பாணக் கல்லூரி.

உரத்துவாசித்தல்

ரி நிர்மலன், சென்ஜோன்ஸ் கல்லூரி, எம் ஜி மைதிலி, உடுவில் மகளிர் கல்லூரி, சி. மார்ஷா. யாழ்ப்பாணக் கல்லூரி

பா ஓதல்

என் சுபாஷினி உடுவில் மகளிர் கல்லூரி, கே பிரதீபன், சென் ஜோன்ஸ் கல்லூரி பி. தேவதாஸ் சென்ஜோன்ஸ் கல்லூரி.

படம் பார்த்து கட்டுரை வரைதல்

சி மார்ஷா. யாழ்ப்பாணக் கல்லூரி எஸ் சுபாஷினி, சுண்டுக்குளி மகளி கல்லூரி, ஆ. சோதார, யாழ்ப்பாணக் கல்லூரி.

குழுப்பாட்டு

சுண்டுக்குளி மகளிர்கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி.

ஆண்டு 9

சொல்வதெழுதல்

ரி. சுரேக்கா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, எஸ் சாமுவேல், யூனியன் கல்லூரி, எஸ். ஜனார்த்தன், யாழ்ப்பாணக் கல்லூரி.

எழுத்து

ஐ தர்ஷினி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வி தயாளன், யாழ்ப்பாணக் கல்லூரி. ஆர். வாசுகி, இடைக்காடு ம.வி.

உரத்து வாசித்தல்

வி. யோகினி, உடுவில் மகளிர் கல்லூரி, எஸ் ஆஷா, யாழ். இந்து மகளிர் கல்லூரி, எஸ், ஆதித்தன், யாழ் இந்துக்கல்லூரி.

பா ஓதல்

ரி சுரேக்கா, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, பி. பிரிந்தா சுண்டிக்குளி மகளிர் கல்லூரி. எஸ். வரதன் யாழ்ப்பாணக்கல்லூரி

குழுப் பாடல்

சுண்டிக்குளி மகளிர்கல்லூரி, உடுவில் மகளிர்கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி.

படம் பார்த்துக் கட்டுரை வரைதல்

சி றேணுகா, உடுவில் மகளிர் கல்லூரி, எஸ் ஆஷா, யாழ். இந்து மகளிர் கல்லூரி, எஸ். சாமுவல் யூனியன் கல்லூரி.

ஆண்டு 10

சொல்வதெழுதல்

வி. இன்பநாதன், பருத்தித்துறை ம.வி பி, உமாபங்கன், சென்ஜோன்ஸ்கல்லூரி, ரி வசீகரன், சென் ஜோன்ஸ் கல்லூரி.

எழுத்து

கே. குகவர்ச்சகன், ஹைஸ் கல்லூரி, பருத்தித்துறை, ஈ.சி. அகஸ்ரின், சென் பற்றிக்ஸ் கல்லூரி. ரி. நந்தினி, யாழ். இந்து மகளிர் கல்லூரி

உரத்து வாசித்தல்

எம் றஜந்தி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, கே. எஸ் குமாரதாஸ், சென்ஜோன்ஸ் கல்லூரி, ஜி ஏ. சுசித்திரா, உடுவில் மகளிர் கல்லூரி.

பா ஓதல்

ஜி. கீதிகா, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, ஆர் ரவி, இளவாலை சென் ஹென்றிஸ், ஏ. ஏ. ருஜநாயகம், சென் பற்றிக்ஸ் கல்லூரி

கட்டுரை வரைதல்

எஸ். சிவகணேஷ், சென் ஜோன்ஸ் கல்லூரி, கே ஐங்கரன், சென்ஜோன்ஸ் கல்லூரி, ஆர் சிவனி, இந்து மகளிர் கல்லூரி.

குழுப் பாடல்

உடுவில் மகளிர் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி இளவாலை கன்னியர் மடம்.

ஆண்டு 11

சொல்வதெழுதல்

எஸ், சௌமிஜா, உடுவில் மகளிர் கல்லூரி, ஜே. கிறிஸ்ரின், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, எம். சுவேந்தினி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, ஜி குகன், சென் ஜோன்ஸ் கல்லூரி.

எழுத்து

எஸ். மாலினி, மெதடிஸ்ற் உயர் கல்லூரி, கே யேகலா, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, கே. கலாஞானசுந்தரி. வட இந்து மகளிர் கல்லூரி.

பா ஓதல்

எஸ் ஏ பிரியந்தா, சென் பற்றிக்ஸ் கல்லூரி, என் பூபாலன், திருஇருதயக் கல்லூரி, எஸ் திருமாலினி, யாழ் இந்து மகளிர் கல்லூரி, எஸ் சுஜாதா, உடுவில் மகளிர் கல்லூரி.

பேச்சு

எம். கார்த்தியாயினி, உடுவில் மகளிர் கல்லூரி, ஜே. லக்ஷிதா சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, சி ஏ. கார்சன், சென் பற்றிக்ஸ் கல்லூரி

கட்டுரை வரைதல்

பி. சிவகுமார், யாழ் இந்துக் கல்லூரி, எஸ் சௌமிஜா, உடுவில் மகளிர் கல்லூரி, ஜே. கிறிஸ்ரின், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

குழுப்பாடல்

யாழ் இந்து மகளிர்கல்லூரி, (உ)டுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி.

ஆண்டு 12

கட்டுரை வரைதல்

ஆர். வாசுகி, யாழ்ப்பாணக் கல்லூரி ஏ. என் தமயந்தி. இளவாலை கன்னியர் ம வி, கே கேதீசன், யாழ் இந்துக் கல்லூரி.

பா ஓதல்

எம். ராஜநிலந்தி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, எஸ். சாந்திகுமாரி, பருத்தித்துறை எம் ஏச் எஸ், பி. நர்மதா, யாழ் இந்து மகளிர்கல்லூரி.

பேச்சு

ஆர். பிரியதர்ஷினி, உடுவில் மகளிர்கல்லூரி. ஆர். ரேமினா, உடுவில் மகளிர் கல்லூரி, எஸ். எம். டி. றஞ்சித், இளவாலை சென் ஹென்றிஸ்.

குழுப்பாடல்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி.

(ச-வா) [தொடரும்]

## கண்காட்சி

உடுவில், திங்கள்

உடுவில் மகளிர் கல்லூரி தொடர் கல்விப் பிரிவினால் பரந்தளவில் மனையியல், கைப்பணி, அலங்காரக் கலை ஆடைகள் தைத்தல் போன்ற பல்வேறு பிரிவுகளடங்கிய கண்காட்சி எதிர்வரும் 26, 27ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

இக் கண்காட்சியில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சகல மகளிர் மாதர் நிலையங்களும் பங்குபற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. [இ]

## இடர்பாடுகளுக்கிடையில் கல்வி கற்பது அவசியம்

நெல்லியடி, திங்கள்

எவ்வித இடர்பாடுகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்களின் பரம்பரைச் செல்வமாகிய கல்வியை தளரவிடாது அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற பொதுமக்களினதும் மாணவர்களினதும் மனப்பான்மையின் பிரதிபலிப்பே இன்று குடாநாட்டில் ஆங்காங்கு திறம்பட்ட சிறப்பான முறையில் நிகழும் பொருட்காட்சிகளாகும்''.

இவ்வாறு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற உடுப்பிட்டி கல்விவட்டாரப் பாடசாலைகளின் பொருட்காட்சியைத் திறந்துவைத்து உரையாற்றிய வடமானில கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் கூறுனர்.

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஈ. கே ஈசுரபாதம் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் உடற்கல்விக் கல்வியதிகாரி திரு. வீ. தங்கராசா வேலணை வட்டாரக் கல்வியதிகாரி பண்டிதர் பொன், கணேசன் திரு. கே. கே. கணேசன் ஆகியோரும் உரையாற்றினர்.

# நெருக்கடிக்கு மத்தியிலும் பொருளாதாரத்தைக் கட்டிவளர்க்கவேண்டும்

நெல்லியடி, திங்கள்

''இளஞ்சந்ததியினர் தலைமைதாங்க முன்வந்துள்ள இன்றையநிலையில் அவர்களுடன் இணைவது அவர்களை நலவழிப்படுத்த ஆலோசனை கூறுவது எமதுகடன், வதிரியில் இன்று இளைஞரும், யுவதிகளும் முறபோக்கான முறையில் பலஆக்கபூர்வமான முயற்சிகளில் இறங்கியுள்ளமை வரவேற்கத்தக்கதாகும்''.

இவ்வாறுகுடும்பத்திட்ட சங்கத்தின் யாழ். மாவட்ட அலுவலர் திரு. ஏ. எஸ். பூவேந்திரன் வதிரித் தமிழ்மன்ற 5ம் ஆண்டுபூர்த்திவிழாவில் பேசும் போது குறிப்பிட்டார்.

செல்வி ஏ. சூரியகலா தலைமையில் நடந்த விழாவில் தொடர்ந்துதிரு பூவேந்திரன் பேசுகையில், ''எவ்வித நெருக்கடியிலும் பொருளாதாரத்தைக் கட்டிவளர்த்து அதன் அடிப்படையில் கலை, கலாசாரத்தை வளர்க்க வேண்டும். கிராமங்கள் தோறும் பண்ணைகள், குடிசைக்கைத் தொழில் ஆகியவற்றில் ஈடுபடல் வேண்டும்' என்றார்

பனம்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு க. நடராசா, மாவட்ட இளைஞர் ஒன்றிய அதிகாரி திரு கே. எஸ் கார்த்திக், திரு கா. பாரிவள்ளல் ஆகியோரும் பேசினர் செயலாளர் செல்வி சிலம்புச்செல்விநன்றி கூறினார்.

## பாதுகாப்பற்ற கிளைகளைமூட பணிப்பு

வவனியா, திங்கள்

நஷ்டத்தில் இயங்கும் அல்லது பாதுகாப்பு இல்லாத கூட்டுறவு கிளைகளை உடனடியாக மூடும்படி கூட்டுறவு அமைச்சர் பணித்துள்ளதாக வவனியா கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். தில்லை நடராசா தெரிவித்தார். (எ)

## அகதிகளுக்கு பணி

மூதூர், திங்கள்

புனித சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த இரு சகோதரிகள் திருமலை நிலாவெளி அகதிகள் முகாமில் தங்கியுள்ள அகதிகளின் சுகாதாரத்தைப் பேணும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சகோதரி இனிகா சகோதரி கிறிஸ்தா ஆகிய இரு சகோதரிகளும் இரண்டு கிழமைக்கு இந்த அகதி முகாமில் தங்கியிருந்து அகதிகளின் சுகாதார விடயங்களைப் பற்றிக் கவனிப்பர். எ[(]

## வார்ஸோ-நேட்டோ பிரதிநிதிகளின்

# ஸ்ரக்ஹோம் மகாநாட்டில்

# சில விடயங்களில் இணக்கம்

## துருப்புக்கள், டாங்கிகள் குவிப்பு குறித்துக் கட்டுப்பாடு

ஸ்ரக்ஹோம், செப். 22

வார்சோ ஒப்பந்த நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் நேட்டோ நாடுகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் ஸ்ரக்ஹோமில் நடைபெற்ற ஆயுதக்கட்டுப்பாடுகள் தொடர்பான மாநாட்டில் ஒப்பந்தத்திற்கு தடையாகவிருந்த சில கருத்துவேறுபாடுகளில் தற்போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

1979ம் ஆண்டுக்கு பின்னர் செய்துகொள்ளப்படவிருக்கும் முதலாவது ஆயுதக்கட்டுப்பாடு குறித்து நடைபெற்ற இந்த மாநாட்டில் செய்து கொண்ட உடன்படிக்கைகள் பற்றிய விபரங்கள் எதுவும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை.

என்னும் கிடைத்த சில தகவலின்படி 13,000 துருப்புகள் மற்றும் 200 டாங்கிகளுக்கும் அதிகமாக ஆயுதங்கள் ஒரு இடத்தில் குவிக்கப்படுவதானல் அதுபற்றி ஓராண்டு முன்னதாகவே அறிவிக்கப்படவேண்டுமென்று அறிக்கை ஒன்றுதெரிவித்துள்ளது. அத்துடன் 17,000பேருக்குமதிகமானவர்கள் சம்பந்தப்பட்ட எந்தவொரு பயிற்சிகளிலும் வெளிநாடுகளில் இருந்து பார்வையாளர்கள் அழைக்கப்படவேண்டும்.

மேலும் ஒரு நாடு மற்றொரு நாட்டை மோசடிசெய்வதாக கருதினுல் சந்தேகத்திற்குரிய ராணுவ நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கும் அதற்கு உரிமை உண்டு.

இவ் ஒப்பந்தம் குறித்து நடைபெற்ற இம்மாநாடுபற்றி அமெரிக்க பிரதிநிதி கருத்து தெரிவிக்கையில், கடந்த ஆறு வருடங்களின் பின் நடைபெறும் இப் பேச்சுவார்த்தைகள் மூலம் ஐரோப்பாவை மேலும் ஓர் உறுதியான இடமாக ஆக்கிவிடுமென்ருர், இவ் ஒப்பந்தத்தை சோவியத் பிரதிநிதியும் வரவேற்றுள்ளார்.

இதற்கிடையில் வடக்குக் கடலில் வடஅத்திலாந்திக் உடன்படிக்கை ஸ்தாபனம் நேட்டோவின் பயிற்சிகளில் பங்கேற்க நேட்டோவின் 21 கப்பல்கள் அங்கு சென்றுள்ளதை எதிர்த்து டச் தலைநகர் அம்ஸ்ரெடாமில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன.

அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டனின் மூன்று கப்பல்கள் அணுஆயுதங்களை ஏற்றி செல்வதாயும் அந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 2000 பேர் எதிர்ப்பு சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளுடன் தங்கள் சிறிய படகுகளில் கடலை அண்மித்த பகுதிகளில் கூடி ஆர்ப்பாட்டம்செய்தனர். (சி)

## குர்க்கா தீவிரவாதிகளுக்கு

# ராஜீவ் ஆதரவு என்பதை மத்திய அமைச்சர் மறுக்கிறுர்

புதுடில்லி, செப். 22

குர்க்கா தேசிய விடுதலை முன்னணித் தலைமையை பிரதமர் திரு. ராஜீவ்காந்தி ஊக்குவித்துவருகிருர் என்று மேற்கு வங்க முதலமைச்சர் திரு. ஜோதிபாசு தெரிவித்தகுற்றச்சாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு. பூட்டாசிங் கண்டித்துள்ளார்.

திரு. பாசு வங்க மக்களை தவருன பாதையில் வழிநடத்திச் செல்வதுடன் உண்மைகளை திரித்தும் கூறுகிருர் என்றும் திரு. பூட்டாசிங் தெரிவித்துள்ளார்.

குர்க்கா தேசிய விடுதலை முன்னணி இயக்கம் தேசவிரோதமானது, பிரிவினைவாத இயல்புடையது என்பதை தெரிவிக்கும் தஸ்தாவேஜுகள் எதுவும் தமது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டால் அது குறித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் திரு. ராஜீவ்காந்தி கூறியுள்ளதாகவும் திரு. பூட்டாசிங் தெரிவித்தார்.

இதற்கிடையில் பிரதமர் ராஜீவ்காந்தி கடந்தவாரம் டில்லியில் நடைபெற்ற கூட்டமொன்றில் குர்க்கா தேசிய விடுதலைமுன்னணி பிரிவினைவாத இயக்கமல்ல என்றும் அது தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லையென்றும கூறிய கருததை பல தலைவர்கள கண்டிததுள்ளனர்.

## பங்களாதேஷில்

# திட்டமிட்டபடி ஜனுதிபதி தேர்தல் நடைபெறும்

டாக்கா, செப் 22

ஜனுதிபதித் தேர்தலைஎதிர்க் கட்சிகள் பகிஷ்கரிக்கப் போவதாக கூறியுள்ளபோதும் அடுத்த மாதம் 15ம் திகதி ஜனுதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும்என்று பங்களாதேஷ் ஜனுதிபதி

உலகச் செய்திகள்

ஜெனரல் எர்ஷாத் கூறியுள்ளான்.

எந்தவொரு சூழ்நிலையிலும் தேர்தல் பிற்போடப்படமாட்டாது என்றும் கிட்டத்தட்ட 54 மாத கால ராணுவ ஆட்சிக்குப் பின்னர் முதன்முறையாக நடைபெறவுள்ள ஜனுதிபதி தேர்தலை பிற்போடுவதற்கான காரணம் எதுவும்இல்லையென்றும் ஜெனரல் எர்ஷாத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நியாயமான, சுதந்திரமான தேர்தல்களிற்கு வகைசெய்யும் விதத்தில் நாட்டில் ராணுவ ஆட்சி நீக்கப்படும் வரை தேர்தலில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

இந்த ஜனுதிபதி தேர்தல் எதிர்ப்பு நடவடிக்கைகளாக தேர்தல் தினத்தன்று பொது வேலை நிறுத்தமொன்றை நடாத்துமாறு மக்களை கோரவுள்ள எதிர்க்கட்சிகள் ஜனுதி எர்ஷாத்தை பதவியிலிருந்து ராஜினமாச் செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளன.

## இந்தியாவிற்கான முதல் பதக்கம்

சிலோல், செப். 22

சியோலில் நடைபெறும் பத்தாவது ஆசிய விளையாட்டு போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர் ஒருவர் இந்தியாவுக்கான முதல் பதக்கத்தை பெற்றுள்ளார்.

பாரம் தூக்கும் போட்டியில் கலந்துகொண்ட தமிழ் வீரரான ஜி முத்துசாமி மூன்றும் இடத்தைப்பெற்று வெண்கலப்பதக்கத்தைப் பெற்றதன் மூலம் இந்தியாவிற்கான முதல்பதக்கம் கிடைத்தது. (சி)

## கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செவ்

வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலைகள்அமைப்பு உப-கொத்தணி கல்விக் கண்காட்சி கடந்தவாரம் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு.கு. சோமசுந்தரம் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். இக்கல்விக் கண்காட்சிக்கான சகல ஏற்பாடுகளையும் அராலி சரஸ்வதி ம.வி அதிபர் திரு. மு. திருநீலகண்டசிவம் மேற்கொண்டிருந்தார். (சி)

## பயங்கரவாத எதிர் நடவடிக்கைகளில் பாகிஸ்தானின் அசட்டைப்போக்கு

-ஈராக் கண்டனம்

பாக்தாத், செப் 22

பாகிஸ்தானில் இயங்கி வரும் பயங்கரவாதிகளை கைது செய்வதில் பாகிஸ்தான்காட்டி வரும் அசட்டைப் போக்கு குறித்து ஈராக் பாகிஸ்தானிடம் வன்மையானஆட்சேபனை தெரிவித்துள்ளது.

கராச்சியில் ஈராக் நாட்டு தூதரக பிரதிநிதி ஒருவர் கொல்லப்படுவதற்கு காரணமாக விருந்த கார் குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு 25 நாட்களுக்கு முன்னரே புகைப் படங்களுடன் கூடிய 25 பயங்கரவாதிகளின் பட்டியல் ஒன்றை ஈராக் பாகிஸ்தானி அரசுக்கு அளித்திருந்தது. ஆயினும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும் தற்போது தூதரக ஊழியர் பலருக்கு கொலைப் பயமுறுத்தல் கடிதங்கள் வந்திருப்பதால் இந்த பயங்கரவாதிகளை உடனடியாக கைது செய்யுமாறு பாகிஸ்தான் அரசை ஈராக் வற்புறுத்தியுள்ள போதும் பாகிஸ்தான் இவ்வாருன பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை எதனையும் மேற்கொள்வதாக தெரியவில்லை என்றும் ஈராக்குற்றம் சாட்டியுள்ளது.

இம்மாதத்தில் பாகிஸ்தானில் நடைபெற்ற மூன்று பயங்கரவாத சம்பவங்களினுல் இந்திய விமானப் பயணிகள் பிரான்ஸ் ஈராக் தூதரக உயரதிகாரிகள் பாதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

## ஐ. நா.விலிருந்து வெளியேற்றப்பட்ட சோவியத்தின்

# முதல் தொகுதி ராஜதந்திரிகள் நேற்றுப் புறப்பட்டனர்

நியூயோர்க் செப் 22

ஐ. நாவிலிருந்து அமெரிக்காவினுல் வெளியேற்றப்பட்ட 25 சோவித் யூனியன் ராஜதந்திரிகளில் முதல் தொகுதியினர் நியூயோர்க்கிலிருந்து இன்று (22ம் திகதி) புறப்படுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவில் உளவுவேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் அனைவரும் நாட்டைவிட்டு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கிடையில் வெளியேறும்படி பணிக்கப்பட்டுள்ளார்கள்.

மொஸ்கோவில் கடந்த மாதஇறுதியில் அமெரிக்கபத்திரிகையாளர் நிக்லஸ் டானிலோவ் கைது செய்யப்பட்டதையடுத்தே அமெரிக்கா இந்த நடிவக்கையில் இறங்கியது.

இன்று நியூயோர்க்கிலிருந்து புறப்படவிருக்கும் சோவியத் ராஜதந்திரிகள் தொடர்பாக சோவியத் வெளிநாட்டமைச்சின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டபோது கூறினுர்.

சில அதிகாரிகள் விடுமுறைக்காக சோவியத் யூனியன் செல்கின்ருர்கள் என்றும் ஏனையோர் அமெரிக்காவை விட்டு வெளியேறுகிருர்கள் என்றும்

[7ம் பக்கம் பார்க்க]

பவர்ஸ் உரம்
ஒப்பற்றது
ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 1.., கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6
ரூபா 2,000/-க்குமேல்
MASTERS ABC 4/82 (A)

# 'உலகவங்கி அபிவிருத்தி திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது'

### --- வவனியா அரசஅதிபர்

வவனியா திங்கள்

''கிராமிய மட்ட அபிவிருத்தி திட்டங்களுக்கு கிராமிய மக்களுடையஒத்துழைப்பு மிக அவசியமாகும்''

இவ்வாறு வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன் சேமமடு கிராமசேவையாளர் பிரிவிலுள்ள நொச்சிக்குளம் பாடசாலையில் நடைபெற்ற கிராம எழுச்சி பற்றிய கலந்துரையாடலின்போது கூறினார்,

உதவி அரசாங்க அதிபர் திரு. கே. ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அரச அதிபர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''ஐக்கிய நாடுகள் சபை அடுத்த வருடத்தினை சர்வதேச வீடமைப்பு ஆண்டாக பிரகடனம் செய்துள்ளது கிராம எழுச்சி திட்டத்தினையும் இத்திட்டத்துடன் இணைத்துள்ளோம்.

''கிராம எழுச்சி திட்டத்தின் கீழ் நொச்சிக்குளம் கிராமத்தினை நாம் தெரிவு செய்துள்ளோம். இக்கிராம மக்களுக்கு பல அத்தியாவசிய அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவே இதனை தெரிவு செய்தோம்.

''இப்போது எமக்கு நிதி வருவது குறைந்து விட்டது. தற்போது இங்கு உலக வங்கி அபிவிருத்தி திட்டம் கூட நிறுத்தப்பட்டு விட்டது!

''கிராமிய குளங்கள் அபிவிருத்திக்கு என தயாரிக்கப்பட்ட திட்டமும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் எம்மிடம் மாவட்ட அபிவிருத்திசபைநிதியிலும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்தும் அபிவிருத்திக்கென உங்கள் பகுதிகளுக்கும் ஒதுக்கீடு செய்ய முயற்சிக்கின்றோம்.

''வெளிநாட்டு தன்னிச்சை ஸ்தாபனங்கள் பல நம் நாட்டில்உள்ளன. இந்தஸ்தாபனங்கள் மூலமாகவும் பல வேலைத் திட்டங்களை நாம் செய்யலாம்''.

இவ்வைபவத்தில் திட்டப் பணிப்பாளர் திரு.ரி. இலங்காநேசன், கல்விப்பணிப்பாளர் திரு வி. சபாநாயகம், தாய்-சேய் மருத்துவ அதிகாரி திருமதி டாக்டர் எஸ். மாணிக்கராஜா, கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். தில்லை நடராஜா, நொச்சிக் குளம் பாடசாலை அதிபர் திரு இ. இளையதம்பி உட்பட பலர் உரையாற்றினர்கள்.

(இ)

மிது வீடியோ மூவிசாரின்

## இன்றைய புதியவெளியீடு

★ சத்யராஜ் ★ ஜீவிதா ★ ரவீந்தர் நடித்த

## இரவுப் பூக்கள்

மிது வீடியோ மூவிஸ்,
பிரதான வீதி, சித்தன்கேணி.

[A 1352]

## Computer Programming Course

யாழ் நகரில் கொம்பியூட்டர் துறையில் அதிசிறந்த IDP ஸ்தாபனம் வழங்கும் இவ்வருடத்திற்கான DIPLOMA IN COMPUTER PROGRAMMING COURSE

ஆரம்பம்: 27-09-86 (சனி)

Classes at:
SHINE INSTITUTE - Tellippallai 8-30 a. m.
MODERN EDUCATION CENTRE - Karaveddi 2-30 p. m.

சேரும் போது கட்டணம் 500/- மட்டுமே.

C/o T. CHANDRAN
D.M. O. Quaters 6-30p.m.
Tellippallai.

INSTITUTE OF DATA PROCESSING
(I D P)
342, K.K.S. Rd.-10-30 a.m
Jaffna. Phone: 24026

விரைவில் RIVISION COURSE கொக்குவிலிலும் ஆரம்பமாகின்றது. பயிலவிரும்புவோர் உடன் பதிவு செய்யவும்.

★ பரீட்சை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

C 4784

## ஐ. நா...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறிய அவர் அமெரிக்காவின் இந்த வெளியேற்று நடவடிக்கை குறித்து சோவியத் யூனியன் தகுந்த பதிலளிக்கும் என்றார்.

தற்போதையஇந்த பிரச்னை அமெரிக்க சோவியத் நல்லுறவுகளில் பெரும் விரிசல் நிலை கொண்டுள்ளது.

உண்ணாவிரதமிருக்கும்

# இளைஞரின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்து

யாழ்ப்பாணம், செவ்

''பூஸாவிலும்வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் சாகும் வரை உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கும் தமிழ் இளைஞர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றும் படி வட - பிரதேச தொழிற்சங்களின் கூட்டுக்குழு அரசை வற்புறுத்தியுள்ளது.

மேற்படி குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''அடிப்படை மனித உரிமைகள் தான்தோறித்தனமாக முறையில்முறையில் மீறப்படுவதுடன் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றன. இதனை மனிதாபிமானமுள்ள எந்த சக்தியாலும் ஏற்றுக்கொள்ளப் முடியாது இத்தகைய கொடூரமான செயல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

''கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் பேசும் மக்களை அகதிகளாக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். சாதாரண அப்பாவி பொது மக்கள் படுகொலை செய்யப்படுவதும் சிறையில் சித்திரவதை செய்யப்படுவதும் உடமைகள் அழிக்கப்படுவதும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

''தொழிலாளிவர்க்கமும் ஏனைய முற்போக்குச் சக்திகளுக்கும் இந்த கொடுமைகளுக்கெதிராக ஐக்கியப்பட்டு குரல் கொடுப்பதுடன் இவற்றை எதிர்த்துப்போராட்களை நடத்துவதற்கு தங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.''

(எ)

# வவுனியா அபிவிருத்திச்சபை

# கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அபிவிருத்திச்சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்குக் கொடுப்பதற்கான அரக்குமுத்திரையிட்ட கேள்விகள் வவுனியா அபிவிருத்திச்சபை மாவட்டச் செயலாளரால் 15-10-1986 பி. பகல் 3-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''கடைகளை வாடகையில் கொடுப்பதனற்கான கேள்விகள்'' என எழுதி மாவட்டச்செயலாளர், அபிவிருத்திச்சபை, வவுனியா. என்ற விலாசத்திற்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களை 14-10-1986 நண்பகல் 12-00மணிவரை அபிவிருத்திச்சபை தலைமை அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் ரூபா 50/-ம் மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் ரூபா 250/-ம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வலுவலகத்திலிருந்து பெறக்கூடியதான படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கேள்விகள் 15-10-1986 பி. ப. 3-00 மணிக்குத் திறந்து ஆராயப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமூகமளிக்கலாம்.

கேள்விகள் ஏற்றல் விடயம், நிர்ணயிக்கப்படும் வாடகைக்குப் பிறம்பாக, மீளளிக்கப்படாத மிகக்கூடிய உரிமைப்பண அடிப்படையில் தீர்மானிக்கப்படும். கேட்கப்படும் கேள்விகள் ஆகக்குறைந்த கேள்வித்தொகைக்குக் கூடுதலாக இருக்கவேண்டும்.

சித்திபெற்ற கேள்விக்காரர் கேள்வி ஏற்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு கிழமைக்குள் கேட்கப்பட்ட முழு உரிமைப் பணத்தையும் ஒரே முறையில் செலுத்துவதுடன் ஆறுமாத வாடகையையும் முற்பண வைப்பாகச் செலுத்தவேண்டும். மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யாத கேள்விகள் இரத்துச்செய்யப்படுவதுடன் கேள்விப் பிணைப்பணமும் பறிமுதல் செய்யப்படும்.

கேள்விகளை ஏற்றல், நிராகரித்தல் விடயத்தில் மாவட்டச் செயலாளரின் தீர்ப்பே இறுதியானதாகும்.

வேறு தேவையான விபரங்களை அலுவலக நேரங்களில் அபிவிருத்திச்சபைத் தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

### அட்டவணை

| | உப அலுவலகம் | கடையின் பெயர் | இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| 1. | நடுச்செட்டிகுளம் | சாளம்பைக்குளம் | I (1) | 5,000/- |
| 2. | நடுச்செட்டிகுளம் | சாளம்பைக்குளம் | II (2) | 5,000/- |
| 3. | நடுச்செட்டிகுளம் | பம்பைமடுச் சந்திக்கடை | | 7,500/- |
| 4. | சின்னச்செட்டிகுளம் மேற்கு | குருக்களூர் | | 5,000 |
| 5. | சின்னசெட்டிகுளம் மேற்கு | ஆண்டியாபுளியங்குளம் | I (1) | 5,000/- |
| 6. | சின்னச்செட்டிளம் மேற்கு | ஆண்டியாபுளியங்குளம் | II (2) | 5,000/- |
| 7. | மேல்பற்று கிழக்கு | நெடுங்கேணிசந்தைக்கடை | I (1) | 10,000/- |
| 8. | மேல்பற்று கிழக்கு | நெடுங்கேணிசந்தைக்கடை | II (2) | 10,000/- |
| 9. | மேல்பற்று கிழக்கு | நெடுங்கேணிசந்தைக்கடை | III (3) | 10,000/- |
| 10. | மேல்பற்று கிழக்கு | நெடுங்கேணிசந்தைக்கடை | IV (4) | 10,000/- |
| 11. | மேல்பற்று கிழக்கு | நெடுங்கேணிசந்தைக்கடை | V (5) | 10,000/- |

கே. சி. லோகேஸ்வரன்
மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபரும்.

அபிவிருத்திச்சபை, வவனியா.

[A-1402]

# நெருக்கடி நிலையில் கல்வித்துறையில் கவனம் செலுத்துவதற்குப் பாராட்டு

நெல்லியடி திங்

''இன்றைய நெருக்கடியான கால கட்டத்திலும் எமது மக்கள் கல்வித்துறையிலும் கலை, கலாசாரத்துறைகளிலும்தீவிர பங்கு கொண்டு உழைப்பது வரவேற்கத்தக்கதாகும். நெருக்கடி காலம் எப்பொழுது முடிவுக்கு வரும் என்று எதிர்பார்த்திராது இவ்வித நிகழ்ச்சிகளை முன்வந்து நடாத்துவது பாராட்டுக்குரிய தொன்றும்''.

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய இராசலிங்கம்மண்டபத்தில் நடந்த கலையரங்கத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. வீ. கே. ஈசுரபாதம் கூறினார்.

கல்லூரிப் பழையமானவர் சங்க உபதலைவர் திரு. சு. நாகேந்திரம் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கினர்.

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வே. தில்லைநாதன், திரு. சி. பிரபாகரன் கல்லூரி அதிபர் திரு. ரேய் காந்தராஜ் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

காவடி, நாட்டிய நாடகம், வீணை இசை, குழுநாட்டியம் ஆகியவற்றுடன் பட்டிமன்ற விவாதமும் இடம்பெற்றன.

[இ]

## 'சிறுவர் போஷாக்கு அபிவிருத்தி நிதியம்'

மூதூர், திங்கள்

சிறுவர்களின் போஷாக்கு சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திருமலையில் சிறுவர் போஷாக்கு அபிவிருத்தி நிதியம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

திருமலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.சி. கே.செல்வத்துரை இதன் தலைவராகச் செயல்படுகிறார்.

[எ]

## கந்தபுராண படிப்பு

பளை, திங்கள்

மடத்தடி சித்திரவேலாயுத கந்தசாமி கோயிலில் கந்தபுராண படிப்பு கடந்த புதன் கிழமை ஆரம்பமாகிதொடர்ந்து படிக்கப்பட்டு வருகின்றது. இதனை பெருந்தொகையான பக்தர்கள் தினமும்வந்து கேட்டுவருகிறார்கள்.

(இ)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
செவ்வாய்க்கிழமை 23-9-86

# 6-ம் ஆண்டு தமிழ் பாடப்புத்தகம்: கல்லூரி அதிபர்கள் அதிருப்தி

## கல்வி அமைச்சுக்கு விரிவான அறிக்கை அனுப்ப தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

அரசாங்கம் இலவசமாக வழங்கியுள்ள 6-ம் ஆண்டு தமிழ்ப்பாடப் புத்தகம் தொடர்பாக கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள் மத்தியில் பலத்த அதிருப்தி நிலவுகின்றது.

பாடங்களின் நோக்கம் நிறைவுபெறவில்லை. தமிழ் அறிஞர்களுக்கு போதிய இடம் கொடுக்கப்படவில்லை. அச்சுப் பிழைகளும் அதிகம் காணப்படுகின்றனவென அவர்கள் குறைகூறியுள்ளனர்.

இப்பாடபுத்தகத்தின் குறைபாடுகள் பற்றி காங்கேசன்துறை கல்வி வட்டார பாடசாலைகளின் அதிபர்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கூடி ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து விரிவான அறிக்கை ஒன்றை தயாரித்து கல்வியமைச்சின் கவனத்திற்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடப்புத்தகத்தினை ஆய்வு செய்த அதிபர்கள் குழு பின்வரும் குறைபாடுகளை சுட்டிக் காட்டியுள்ளது.

44 பாடங்கள் இடம் பெற்றுள்ள இப்பாடப்புத்தகத்தில் தமிழர் கலாசாரத்தோடு சம்பந்தப்பட்ட 6 பாடங்களும் இஸ்லாமிய கலாசாரத்தோடு சம்பந்தப்பட்ட 10 பாடங்களும் சிங்கள கலாசாரத்தோடு சம்பந்தப்பட்ட 2 பாடங்களும் பொதுவான 26 பாடங்களும் உள்ளன, தமிழ்அறிஞர்களில் ஒருவருக்கு மட்டுமே இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படியான பாடப்புத்தகத்தை நாம் பாடநூலாக ஏற்றால் எதிர்கால தமிழ் சமுதாயம் எம் மீது குறை கூறும்.

திருக்குறளில் ஒருகுறள்கூட இப்பாடப்புத்தகத்தில் இடம் பெறவில்லை

எழுத்துப்பிழை, அச்சுப் பிழை, வசனப்பிழை அதிகளவில் உள்ளன.

பாடங்களின் நோக்கம் நிறைவு பெறவில்லை. கருப்பொருள் இல்லை பயிற்சி வினுக்கள் 6-ம் ஆண்டு மாணவர்களின் தகுதிக்கேற்ப அமையவில்லை. சிந்தனையைத் தூண்டக் கூடிய முறையில் இல்லை.

அட்டைப்படங்கள் தமிழர் திருப்திப்படக் கூடியதாக இல்லை. (மாவை. நிரு. ஆ-இ)

### நீதிமன்றங்கள்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மானித்துள்ளது.

யாழ். நீதிமன்றத்தில் யாழ். சட்டத்தரணிகள் சங்க உபதலைவர் எம்.எம். சுந்தரலிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

பூசா, வெலிக்கடை சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களின் கோரிக்கைகள் நியாயமானதென இக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதற்கு ஆதரவாக இன்று முதல் 29ம் திகதிவரை சகல நீதிமன்றங்களையும் பகிஷ்கரிப்பதென சட்டத்தரணிகள் சங்கம் முடிவு செய்துள்ளது.

இப் பகிஷ்கரிப்பிற்கு வட பகுதியிலுள்ள மற்றும் சட்டத்தரணிகள் சங்கங்களின் ஆதரவையும் கோருவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

### வெலிக்கடை---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தப்பட்டது. இக் கூட்டத்திலேயே இவ் உண்ணாவிரதப் போராட்டம் சம்பந்தமாக முடிவு எடுக்கப்பட்டது.

சகல பீடங்களையும் சார்ந்த மாணவர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் மட்டுநகர் படுகொலைகள் சம்பந்தமாக கண்டித்து தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் பலியான மக்களுக்கும், போராளிகளுக்கும் அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மூன்று நிமிட மௌனமும் அனுஷ்டிக்கப்பட்டது.

''சிறையிலுள்ள தமிழ்பேசும் அரசியற் கைதிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவாகவும், இந்தப் பாசிச அரசின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளைச் சர்வதேச அரங்கிற்கு அம்பலப்படுத்தவும், எமது மக்களுக்குச் சித்திரவதை முகாம்களில் நடைபெறும் துன்புறுத்தல்களைத் தெரியப்படுத்தும் நோக்குடனும் உண்ணாவிரதப் போராட்டத்தினை முன்னெடுக்கவேண்டும்'' என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதுடன், பாடசாலைகளில் மாணவர்களுடன் கலந்துரையாடல்களையும் கருத்தரங்குகளையும் மேற்கொள்ளும் வகையில் அதிபர்களையும், ஆசிரியர்களையும் ஒத்துழைப்பு நல்குமாறும், தொழிற் சங்கங்களையும், வெகுஜன அமைப்புக்களையும் இப்போராட்டத்திற்கு ஆதரவு நல்குமாறும் மேற்படி நிர்வாகக் குழு கேட்டுள்ளதுடன், நாளை புதன் மாலை 4 மணிக்கு மாணவர் பொது அறையில் தம்மைச் சந்திக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

25ந் திகதி போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதால் அன்று தொடக்கம் நடைபெறவிருந்த சகல பரீட்சைகளையும் ரத்துச்செய்ய வேண்டுமென நிர்வாகத்திடம் கேட்கப்பட்டுள்ளதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. [ரா]

## எம். ஜி. ஆர். 28ம் திகதி நாடு திரும்புகிறார்

சென்னை, திங்கள்.

மருத்துவ பரிசோதனைக்காக அமெரிக்கா சென்ற தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் இம்மாதம் 28ம் திகதி சென்னை திரும்பவுள்ளார். [இ]

## யாழ். கோட்டையிலிருந்து படையினர் துப்பாக்கி சூடு; மாடுமேய்த்தவயோதிபர் பலி

### மற்றொருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ். கோட்டை இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு மாடு மேய்த்துக்கொண்டு சென்ற வயோதிபர் ஒருவர் பலியானார். மற்றொரு வயோதிபர் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் சாராயத் தவறணைக்கருகாகவுள்ள பகுதியில் மாடுகளை மேய்த்துக் கொண்டு சென்ற நாகன் சின்னப்பு [வயது 60] என்ற வயோதிபரே பலியானவராவார். கொட்டடியைச் சேர்ந்த இவர் வழக்கமாக மாடுகளை அப்பகுதிக்கு கலைத்துச்சென்று மேய விடுவது வழக்கமெனத் தெரிய வருகிறது.

யாழ். பீச்றேட்டைச் சேர்ந்த ஐ. சுப்பிரமணியம் [வயது 55] என்ற வயோதிபரே காயமடைந்தவராவர். [ச-இ]

### 30-ம் திகதி---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டன ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை எதிர்வரும் 30-ம் திகதி நடத்தவுள்ளது.

இக்குழுவின் கூட்டம் நேற்று நடைபெற்றபொழுது இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

நீதிமன்றப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக வெகுஜனங்களுக்கூடாக நடவடிக்கைகளில் இறங்குதல் ஈழவர் முன்னணி நாளை புதன்கிழமை நடத்தும் ஊர்வலத்திற்கு ஆதரவு வழங்குதல்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 25 முதல் 29 வரை தொடர்ச்சியாக மேற்கொண்டிருக்கும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவளித்தல்'' [ஒ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.

## இன்று

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சியில் உள்ள பாடசாலைகளின் நிலை தொடர்பாக ஆராய்வதென அத்தியாவசிய சேவைகள் குழுவின் ஏற்பாட்டில் இன்று காலை மகாநாடு ஒன்று கிளிநொச்சி குருகுலத்தில் நடைபெறும். [க]

### பாலமோட்டையில்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டைப் பகுதி சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்பட்டது.

இத் தேடுதலின்போது இப் பகுதியில் வசிக்கும் இருபத்தைந்துக்கும் மேற்பட்டோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்கள்.

இது இவ்வாறிருக்க நொச்சி மோட்டையிலிருந்து வவனியாவை நோக்கி கால்நடையாகச் சென்ற இராணுவத்தினரால் தமிழ்இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். [ஒ]

### வாகனேரி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளில் ஆயுதப்படையினரின் நடமாட்டத்தை தடைசெய்யரவர்கள் எரிக்கப்பட்டுள்ளன. [மா]

### வல்வை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டினுள் அடைபட்டுக் கிடந்தனர்.

பின்னர் இரு ஹெலிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் புலிகள் ஹெலிகள்மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இராணுவத்தினர் காயமடைந்திருக்கலாம் என்று தெரியவருகிறது: புலிகள் தரப்பில் ஒரு வீரர் காயமடைந்ததாகவும் புலிகள் அறிக்கை மூலம் தெரியவருகிறது.

இராணுவத்தினரிடமிருந்து 1 ரோல் கோடெக்ஸ், வெடி மருந்துகள், ஏ. கே மகசின் முதலானவை புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை பருத்தித்துறை ராணுவமுகாமில் இருந்தும் இன்று பிற்பகல் 100ற்கும் மேற்பட்ட ராணுவத்தினர் நடந்து வந்து நடராஜர் கலையரங்கம் பக்கமாகவுள்ள 3-ம் குறுக்குத் தெருப்பக்கமாக வந்தசமயம் விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் நடாத்தினர். அத்தாக்குதல்களால் பல ராணுவத்தினர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களை ஹெலிகொப்டர் மூலம் ஏற்றிச் சென்றனர். நிலைகொள்ளஇயலாத ராணுவத்தினர் பின்வாங்கி முகாமுக்கு சென்றடைந்தனர். முகாமிலிருந்து மோட்டார் ஷெல் பிரயோகம் மேற்கொண்டனர்.

தொண்டமனாறு ராணுவ முகாமிலிருந்தும் இன்று பிற்பகல் சின்னக்கடற்கரையடிக்கு வந்த ராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் எனினும் புலிகளின் துப்பாக்கிப்பிரயோகத்தினுல்ராணுவத்தினர்முகாமை அடைந்தனர்.

## பாலம் தகர்ப்பு

வவுனியா, திங்கள்

மாங்குளம் - துணுக்காய் வீதியில் பிரதான பாலம் ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது. [க]

★ ★ ★

கொழும்பு, திங்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலாகமம் கோயிலுக்கருகில் முதலாவது மைல் கல்லிலுள்ள பாலமொன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

## வயோதிபரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், செவ்

இனந்தெரியாத வயோதிபர் ஒருவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் வயோதிபரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

கொக்குவில் கிராமசேவை அலுவலர் திரு. ந ஜெகதீஸ்வரன், மேற்படி ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. இ. பொன்னம்பலம் ஆகியோரும் இச் சடலத்தைப் பொறுப்பேற்று யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். [மா]

### மட்டக்களப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறஇடங்களிலிருந்து ரயில், வாகனப் போக்குவரத்தாலும் துண்டிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்திற்காகப் பலசரக்குக்கடைகளும், கூட்டுறவுக் கடைகளும் சில மணி நேரம் அரைகுறையாகத் திறந்திருந்தன.

இக்கடையடைப்பு விவகாரத்தில் இளைஞர்களில் இரு சாராருக்கிடையே கருத்து வேறுபாடு நிலவியதை அறியக் கூடியதாகவிருந்தது.

கடையடைப்பு விவகாரத்தில் ஆயுதப் படையினர் தலையிட்டு, 'கடைகளைத் திறக்க வேண்டும்! அல்லது நாம் வியாபாரம் நடத்திப் பணத்தையும் பெற்றுக்கொள்வோம்' என்று கடைக்காரர்களை மிரட்டிய சம்பவங்களும் இங்கு நடந்தன.

ஆனாலும் சனநடமாட்டம் வெகுவாகக் குறைந்த நகரம் 3வது நாளாக அமைதியாகக் கிடந்தது இதேவேளை ஆயுதப் படையினரின் நடமாட்டமும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் முன்னைய தினங்களைவிட இன்று அதிகரித்திருந்தன.

இடைக்கிடை குண்டுச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுக்களும் கேட்டன.

ஒரு சந்தியில் படையினர் நின்று கொண்டிருந்தால் மற்ற சந்தியில் போராளிகள் கிறனேட்டுகளை வீசினர். பதிலுக்கு படையினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

படையினர் ரோந்து சென்ற சமயம் எதிர்ப்பட்டு ஓடியவர்கள் மீதும் படையினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதில் நாவற்குடாவைச் சேர்ந்த குடும்பஸ்தர் சங்கரன் [30 வயது] படுகாயங்களுக்குள்ளானார்.

இவ்வாறிருக்க மட்டக்களப்பு மாநகர சபை பிராந்தியத்தில் நேற்று 3வது நாளாக ஊரடங்குச்சட்டம் அமுலுக்கு வந்தது இரவு 6 மணி முதல் இன்று அதிகாலை 6 மணி வரை குறைக்கப்பட்டிருந்தது.

## மரண அறிவித்தல்

**மாணிக்கவாசகர் நடராசா**

சண்டிலிப்பாயைச் சேர்ந்தவரும், உடுவிலில் வசிப்பவருமாகிய மா. நடராசா (Area Manager, Nestle) காலமாகிவிட்டார். அன்னார் தமயந்தியின் அன்புக் கணவரும், கஜேந்திரன் [பரி. யோவான் கல்லூரி], கஜலக்ஷ்மி [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் திருமதி சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மகனும், சண்முகசுந்தரம் (Urban Development Authority), யோகிராசா (Railway Dept.) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23-9-86) மாலை 3-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் [மானிப்பாய் வீதி, உடுவில்] நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். [C 4793]